

முறிந்த பனை

இன்னும் முயற்சிக்கப்படாத
புதிய பாதை நோக்கி

THAGAM

# தாகம்

ஜனவரி 1994 £1.00

FLAT 4
BEAL ROAD FRONTAGE
24 MANSFIELD ROAD
ILFORD
ESSEX
1G1 3AZ

TELEPHONE:
081-553 2917
FACSIMILE:
081-553 2632

**Rengan N. Devarajan**
**Solicitor**

With Compliments

ஆறு இதழ்கள்

**தாகம்**
ஒரு காத்திரமான வாசிப்பு

ஆறு இதழ்கள்

£6

£6

சந்தா பணத்தை
காசோலை (U.K மட்டும்)
காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளை
மூலம் அனுப்பலாம்

*பணம் பெறுபவர் Thagam என எழுதப்படல் வேண்டும்*

தொடர்புகளுக்கு
THAGAM
PO BOX 3186
LONDON E17 6TJ

# இரகசிய பரிசோதனையாம்

கடந்த மாதம் 6ம் திகதி (6-12-93) அதிகாலை 2.18 மணியளவில் இலங்கையின் தென் பகுதியிலுள்ள காடொன்றில் விமானப் படை பயன்படுத்துவதற்காக குண்டுகள் சில பரிசோதிக்கப்பட்டிருக்கலாம் என்று தென்னாசிய சுற்றுப்புற ஆய்வாளர் ஒருவர் ஊர்ஜிதம் செய்யப் படாத கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார். 69 செக்கன்களுக்கு நீடித்த அந்தப் பரிசோதனையில் யுத்த விதிகளின் மரபுகளுக்கு முரணான வகையில் தாமே தயாரித்த குண்டுகளையே பயன்படுத்தி இருக்கலாம் எனவும் தெரிவித்தார். இந்தப் பரிசோதனை முயற்சியால் வன விலங்குகள் பல அதிர்ச்சியில் இறந்திருக்க கூடும் அத்துடன் பெருமளவு காடுகளும் எரிந்திருக்கலாம் எனவும் அச்சம் தெரிவித்தார்.

சிறிய நில நடுக்கம் ஒன்று நிகழ்ந்ததாக அண்மையில் வெளிவந்த செய்தியினுள் அம்பலத்துக்கு வர வேண்டிய இன்னும் எத்தனை இரகசியங்கள் மறைந்து இருக்கின்றனவோ?. □

# தவ(றான)ளை பாய்ச்சல்

ஆர்ப்பரிக்கும் வெற்றி கோஷங்களுக்குள் அதிகளவு கவனத்தை ஈர்க்கப் படாத வெற்றிக்கு முரணான முக்கிய விடயங்கள் பல மறைக்கப்பட்டோ அல்லது மறக்கப்பட்டோ போகின்றன.

ஆனையிரவு சண்டையை விட பூனகரி தாக்குதல் காவு கொண்ட 'மனிசஉயிர்கள்' என்னவோ குறைந்ததுதான். ஆனால் தாக்குதல் பிரதேசத்திலேயே 400க்கு மேற்பட்டோர் சாகவும் 600க்கு அதிகமானோர் உயிருடன் ஊசலாடும் அளவுக்கு படுகாயமுறவும் வேண்டியிருந்த பூனகரி தாக்குதல் (தவளைப் பாய்ச்சல்) வெறும் இராணுவ வெற்றிக்காக அதிக விலையை செலுத்தியிருக்கிறது. ஆனையிரவுச் சண்டையும் பூனகரித் தாக்குதலும் முற்றிலும் வேறுபட்ட இராணுவ மூலோபாயங்களைக் கொண்டவை. ஆயினும் தாக்குதலின் முன் திட்டமிடுதலில் உள்ள தவறுதலும் பலவீனங்களும் ஆனையிரவில் ஆயிரக் கணக்கானோரைப் பலி கொடுக்கக் காரணியானது. இதை ஆழ்ந்து கவனிப்பின் தாக்கிக்கைப்பற்றி – நிலைகொள்ளுதல் என்பது புலிகளால் என்றும் சாத்தியப்படுத்த முடியாது என்பதைக் கிரகிக்க முடியும். உண்மையில் இது அவர்கள் வரித்துக் கொண்ட நலிந்த அரசியல் போக்குடன் உள் பரிவர்த்தனை கொண்டதே ஆகும்.

நடப்பு நிலையிலுள்ள புலிகளின் அரசியல் அடிப்படையில் மாற்றத்துக்கு உள்ளாகாத வரை தவ(ளை)றான பாய்ச்சல்கள் நிகழ்ந்து கொண்டு இருப்பதை மக்கள் மௌனமாக பார்த்துக் கொண்டே இருப்பார்கள். □

## வாணவேடிக்கை பார்க்க ஆசையா?

இந்த உலகத்தில் இல்லை. அண்டவெளியில். 1994, யூலை 20ம் திகதி உங்கள் கண்களை திறந்து வைத்திருங்கள். வால்வெள்ளி Shoemaker Levy 9 அன்றைய தினம் அநேகமாக (Jupiter) வியாழனுடன் செக்கனுக்கு 60 கிலோமீட்டர் வேகத்துடன் மோதக் கூடுமென எதிர் பார்க்கப்படுகிறது. இந்த (Comet) வால்வெள்ளி கடந்த மார்ச் மாதம் M.Shoemaker, அவரது மனைவி மற்றும் David A Levy என்பவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது.

இருந்தாலும் கூட இதுவும் பூமியை ஒரு மிகப் பெரிய வால்வெள்ளி மோதக் கூடுமென்று முன்பு கூறியதைப் போல புஸ்வாணமாகி போய் விடுமோ என்னவோ!

இந்த மோதல் வியாழனில் பூமியை நோக்கியிருக்கும் பகுதியில் நிகழாமல் மறுபக்கத்திலேயே நிகழுமென எதிர் பார்க்கப்படுகிறது. இதனால் வியாழனின் உபகோளான Io இல் பட்டுத் தெறிக்கும் ஒளிக்கற்றைகளின் வண்ண ஜாலத்தை அண்ட வெளியில் பார்க்கக் கூடியதாக இருக்கும். □

## முதல் ஐடியா

நெப்போலியனின் பொறியியலாளர்களில் ஒருவரான அல்பேட் மத்தியூ 1802லேயே யூரோ ரனலுக்கான ஐடியாவை முதன் முதலில் கொடுத்தாராம்.

மே 6ம் திகதி இதற்கான திறப்பு விழா நடக்கவிருக்கிறது.

யூரோ ஸ்டார் ரயிலின் லண்டன் –பாரிஸ் சேவை வரும் யூன் மாதமளவில்தான் பொது மக்கள் பயன்படுத்தக் கூடியதாக இருக்குமெனத் தெரிவித்துள்ளார்கள். □

# கியூபா மாறி வரும் சூழல்

கியூபா வரையறைக்குட்பட்ட முறையில் சிறியளவிலான தனியார் வியாபார நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு அண்மையில் வழிகோலியிருக்கிறது. இது குடும்ப அளவிலான வியாபாரம் எனும் சிறு கட்டமைப்பை உருவாக்க அனுமதியளிக்கிறது.

உற்பத்தி, வேலை, விற்பனை போன்றவற்றில் அரசின் ஏக ஆதிக்கம் என்பதை மாற்றி தனியாருக்கும் இதில் பங்களிக்க முன் வந்திருக்கிறது கியூப அரசு. சமீபத்திய அரசு ஆணையின் மூலம் பிடல் காஸ்ட்ரோ இதற்கான வழிகாட்டல் நெறிகளை வழங்கியுள்ளார்.

இதன்படி ராக்ஸி ரைவர்கள், மெக்கானிக்குகள், தச்சு வேலை செய்வோர், வர்ணம் தீட்டுவோர், வீட்டுப் பராமரிப்பாளர், முடி வெட்டுபவர், சமையல்காரர், வீட்டு வேலை செய்வோர், அலங்கார நிபுணர்கள், உற்பத்திப் பொருட்கள் விற்பனையாளர், கொம்பியூட்டர் புரோகிராம் செய்வோர் போன்றவர்கள் தங்கள் சொந்த தொழிலை மேற்கொள்ளலாம். பொருட்களின் விலையை விற்பவர்களும் வாங்குபவர்களும், சேவையின் கூலியை இருதரப்பினரும் சேர்ந்து நிர்ணயம் செய்ய வேண்டும்.

இந்நடைமுறை திட்டம் குறித்து பல்வேறு விதமான அனுபவங்களை உள்வாங்கும் தேவை கருதி கியூப அரசு சில அதிகாரிகளை வியட்னாம், சீனா போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைத்தது.

மேலும் அமெரிக்க டொலர்களைப் போன்ற பண நோட்டுக்கள் வைத்திருப்பதையோ, புழங்குவதையோ தடை செய்திருந்த கியூப அரசு அதை இப்போது விலக்கிக் கொண்டு விட்டது.

ஆயினும் இந்த மாற்றங்கள் அனைவருக்கும் பொருந்தாது. சட்டத்துறை சார்ந்தவர்கள், மருத்துவர்கள். கொம்பனி முகாமையாளர்கள், இயக்குனர்கள் போன்றோர் தனியார் தொழில் முயற்சிகளில் பங்கெடுத்துக் கொள்ள முடியாது.

தொழிலாளர்கள், குறிப்பாக வேலை இழந்த தொழிலாளர்கள், வீட்டிலிருக்கும் பெண்கள், ஓய்வு பெற்றோர் போன்றவர்கள் தொழில் தொடங்க உரிமையுள்ளவர்கள். ஆனால் இவர்கள் எவரையும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளக் கூடாது.

அரச வேலையை விட்டுவிட்டு ஒரு தனிநபர் தனியாகத் தொழில் தொடங்குவதை அனுமதிப்பது தொடர்பாக பொறுப்பதிகாரிகள் தான் முடிவு செய்ய வேண்டுமென வழிகாட்டி நெறி சொல்கிறது.

சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளான கியூபாவின் நேச நாடுகளின் வீழ்ச்சிக்குப் பின் கியூபாவின் பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவித்திருக்கிறது கியூப அரசு.

இம்மாற்றங்களின் விளைவுகளை முகம் கொள்ளும் அம்சங்களிலேயே கியூபாவின் எதிர்காலம் தங்கியிருப்பதாக சமூக பொருளாதார ஆய்வாளர்கள் கருதுகின்றனர். □

# கறுப்பு இலக்கியவாதி ரொனி மொரிஸன்

கடந்த ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசை ரொனி மொரிசன் பெற்றிருக்கிறார்.

கப்ரியல் கார்சீய மார்க்கோவாஸ், ரெரிக் வோல்நோட், வோலே சொயெங்கா போன்ற மூன்றாம் உலகின் நவீன இலக்கியவாதிகளோடு அமெரிக்க கறுப்பினப் பெண்மனியான ரொனி மொரிசனும் சேர்கிறார்.

நிறவெறிக்கு எதிரான வரலாறு தான் அவர் படைப்புகளின் களம் என்கிறார்கள் விமர்சகர்கள். The Bluest Eye, Sula மற்றும் 1978இல் வெளியான Sons of Soloman போன்றன அவர் படைப்புகள்.

அவரது மிகச் சமீபத்திய புத்தகம் JAZZ.

செழுமையும் கவித்வமும் வாய்ந்தது அவர் மொழி வாடை. தெருக்களின் வயல் வெளிகளின் லயம் கொண்டது அவர் எழுத்து என்கிறார் சோசலிஸ்ட் வேக்கர் பத்திரிகை விமர்சகர் சார்லி ஹோர். □

# செல்வி சிறையில்

ஓவியம்: கிருஷ்ணராஜா



தாகம்
ஒரு காத்திரமான வாசிப்பு

உங்களது படைப்புகளையும் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் வரவேற்கிறோம். எல்லா ஆக்கங்களிலும் உங்கள் பெயர், முகவரி குறிப்பிடப்படல் வேண்டும். ஆக்கங்களில் வரும் அனைத்துக்கருத்துகளும் படைப்பாளிகளதே. படைப்புகள் கொண்டிருக்கும் கருத்துகள் எதுவாயினும் தரமானவை பிரசுரிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
THAGAM
PO BOX 3186
LONDON E17 6TJ

அட்டைப் படத்தில்
'அரசியல் கைதி'
சர்வசேத மன்னிப்புச்சபையின் (Tunisia) டுனிசியப் பகுதியில் 13 வயதுச் சிறுவனால் உருவமைக்கப்பட்ட உலோக முகமூடியணி.

வடிவமைப்பு:
கே. கிருஷ்ணராஜா

புதியதோர் உலகம் செய்வோம்
கெட்ட போரிடும் உலகத்தை
வேரோடு சாய்ப்போம்
— பாரதிதாசன்

# புதிய ஆண்டு

பத்தாண்டு படிப்பினைகளுக்குப் பின்னும் இலங்கை அரசு புத்தரின் போதனைகளுக்குள்ளும் யுத்த வரிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றதே அன்றி இனப் பிரச்சினையின் உள்ளார்ந்த பரிமாணத்தை நேரிடையாக முகம் கொள்ள மறுத்து வருகிறது.

அழிவுக்கான ஒரு யுத்த தீர்வைத்தான் இவ்வரசு தன்னுள் கொண்டுள்ளது என்பதையே பேரின மேலாதிக்க ஒடுக்கு முறையின் குறுக்கு வெட்டு இன்னும் தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

இது மரண விளையாட்டில் ஒரு அரசியல் சூது.

இதனால்,
யுத்தத்தின் தலைவிதி இரண்டு தேசங்களினதும் 'தேசியத் தலைவர்களிடம் சிக்குண்டு போய் அனைத்து மக்களின் தலைவிதியை யுத்தம் மட்டுமே தீர்மானிக்கும் என்ற பூதாகரமாகி விட்ட அபிப்பிராயத்தால் நாடு அபாய கட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

புதிய ஆண்டின் வரவு யுத்தத்தின் ஒரு வயதைக் கூட்ட அல்ல.

ஆனால்.....

# மணலாற்றிலிருந்து வெலிஓயா வரை

மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் (யாழ்) ஐந்தாவது விசேட அறிக்கையின் தமிழாக்கம்

**கௌசிகன்**

பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக பதவியிலிருந்து வரும் அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையானது சிறுபான்மை இனங்களை மேலும் ஒடுக்கும் பாரம்பரியத்திலிருந்து கட்டப்பட்டு, நாட்டில் அமைதியின்மை மேலோங்கவும் பொது வாழ்வில் ஊழல் பெருகவும் காரணியானது. வடகிழக்கிலும் தெற்கிலும் உள்ளே புகைந்து கொண்டிருந்த கிளர்ச்சிக்கான மனோபாவத்தை இந்நிகழ்வு இன்னும் தூண்டி விட்டது. இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளை அரசு கையாண்டதன் உள்ளார்ந்த தன்மையானது, ஆரம்ப நிலையில் இருந்த வடகிழக்கின் தீவிரவாத போக்கு யூலை 83 லிருந்து மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு வழி செய்தது. சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை ஓரளவேனும் தீர்ப்பதற்கான குண இயல்பைக் கூட அதிகாரத்திலுள்ள அரசு கொண்டிருக்கவில்லை.

யூலை 83 இல் நிகழ்ந்த வெட்கக்கேடான வன்முறையானது, மக்களின் மனக்குறைகளை கொடூரமான பலாத்காரத்தினால் தீர்க்க முனைந்ததன் நேரடி மறுவிளை வேயாகும். இந்நிகழ்வு அடிப்படை அறநெறிகளுக்கும் மனித மதிப்பீடுகளுக்கும் குறைந்த பட்சமேனும் மதிப்பளிக்காத, குறுகிய தேசியவாதம் ஆதிக்கம் செலுத்தும் தமிழ் தீவிரவாதத்திற்கு உத்வேகம் கொடுத்து, அது அழிவுப் பாதைக்கான பலத்தை அடைவதற்கு வழிவகுத்தது. இந்த அழிவுப் பாதைக்கான பலமானது நாட்டின் ஐக்கியத்திற்கு சவாலாக இருந்ததோடு நாட்டிற்கு வெளியேயும் கடுமையான எதிர் விளைவுகளை தோற்றிவித்தது. இது நாட்டின் எல்லா விவகாரங்களிலும் மேலாதிக்கம் செலுத்தியது மட்டுமன்றி தெற்கில் எழுந்த கிளர்ச்சிகளுக்கும் பெரும் காரணியாக விளங்கியது.

யூலை 83 இன் பத்தாண்டு நினைவு நாட்களில் பத்திரிகை தலையங்கங்களைப் பிடித்துக் கொண்ட வெலி ஓயா பற்றிய செய்திகள், இவ்வரசு பத்து வருட துயரங்களில் இருந்து ஏதாவது படித்துக் கொண்டதா என்ற கேள்வியையே எமக்குள் எழுப்புகின்றது.

இந்த விசேட அறிக்கையில் முக்கியமான சில கேள்விகளும் அதற்கான பரீட்சார்த்தமான சில பதில்களும் முன் வைக்கப்படுகின்றன.

குறுகிய இராணுவ கருது கோள்களுக்கும், ஊழல்களுக்கும் மேலாக அரசின் திட்டமிடப்பட்ட குடியேற்றம்தான் வெலி ஓயா திட்டத்தில் எதிரொலிக்கிறது. இனப்பிரச்சினை எழுப்பப்பட்டதன் அடித்தளமும் இதுவே.

தீர்க்கப்படாததும் பிரச்சினைக்குரியதுமான சில விடயங்களை இங்கு பார்ப்போம்.

இப்பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த ஏறத்தாள அனைத்துத் தமிழர்களும் – இவர்களில் பெரும்பாலோனோர் 77 கலவரத்தில் பாதிக்கப்பட்டு தங்கள் வாழ்வை மீளமைக்க முயன்றோர் – வளர்ச்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தும் போது விரட்டப் பட்டது ஏன்?

500 குடும்பங்கள் மட்டும் இருக்கும் போது 'அமைப்பு எல்' மகாவலித் திட்டத்தில் (வெலி ஓயா) 3000க்கு மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதாக மகாவலி சபையின் அதிகார பூர்வ அறிக்கை அறிவிப்பது ஏன்?

சிறிதளவு தண்ணீரைத்தான் பெறமுடியும் எனத் தெரிந்தும் பெருந் தொகைப் பணத்தை வெலி ஓயா நீர்பாசனத் திட்டத்தில் (மகாவலி சபையினால் மட்டும் 150 மில்லியன் ரூபாய்) கொட்டப்பட்டது ஏன்?

பல்லாயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் மக்கள் அருகிலிருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் அரச ராணுவத்தால் வீடுகள் அழிக்கப்பட்டு அகதிகளாக இரண்டு வருடங்களாக அலைந்த போது அவர்களுக்கு தற்காலிக குடில் அமைக்கவேனும் அரசு எந்தவித உதவியும்

வழங்கவில்லை. எந்த மந்திரியும் அவர்கள் கண்ணில் படவுமில்லை. ஆனால் 25 யூலையில்(93) வெலி ஓயா ராணுவம் நிலை குலைந்த போது பலம் வாய்ந்த இரண்டு அமைச்சர்கள் இடம் பெயர்ந்த சிங்கள மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகளை மேற்பார்வையிட விரைந்தோடி வந்தது ஏன்?

நாதியற்ற இச்சிங்கள மக்களுக்கு கருணை காட்டுவதற்கு இவ்வரசு உண்மையில் விரும்புகிறதா அல்லது இக்கொலை விளையாட்டின் பகடைக் காய்களாக இவர்களை பாவிக்கிறார்களா?

வேலை வழங்குவதில் விகிதாசார பங்கீட்டை கொள்கையாகக் கொண்டிருப்பதாக பெருமை பேசும் அரசின் மகாவலி சபையில் தமிழருக்குக் கிடைத்த அதி உயர் பதவி கட்டிட நிர்மாண பகுதிக்கு ஸ்ரோஸ் சுப்பிரிண்டன்ற் மட்டுமே. அதே வேளை மகாவலி சபையின் தாய்த்துறையான நீர்ப்பாசனத் துறையில் அதே அமைச்சுக்குக் கீழ் பல தமிழர்கள் டைரக்ரர்களாகவும் உதவி டைரக்ரர்களாகவும் இருப்பது ஏன்?

வெளிநாட்டு நிதியுதவியால் தாராளமாக உதவி பெற்றதும், 1990 வரை 55 பில்லியன் ரூபாய்களை செலவு செய்ததுமான மகாவலி சபையின் பாத்திரம் என்ன?

இக் கேள்விகளுக்கு வரமுன் UTHRஇன் 11ம் அறிக்கையில் வடகிழக்கு குடியேற்றங்களைப் பற்றித் தரப்பட்டவைகளின் முக்கிய அம்சங்களை கவனிப்போம்.

(தொடரும்....)

# கூச்சல்கள் எழும் பாராளுமன்றம்

விஜி

தமிழர் தகவல் நடுவத்தினால் 93, நவம்பர் 13 ம் திகதி Leyton Assembly Hallஇல் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் திரு ஜோசெப் பரராஜசிங்கம் (பா.உ த.வி.கூ.மு) 'பாராளுமன்ற தெரிவுக்குழுவும் அதன் முடிவுகளும்' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

அதிலிருந்து சில குறிப்புகள்.

பாராளுமன்ற தெரிவுக்குழு பற்றி உங்களுக்கு இன்னும் ஞாபகம் இருக்கக் கூடும். அக்குழுவில் 5 வடகிழக்கு தமிழர்கள், 2 மலையக தமிழர்கள், 2 முஸ்லீம்கள் மிகுதி 36 பேர் பெரும்பான்மைச் சிங்களவர்கள். இதனைப் பார்க்கும் போது ஏன் இந்தத் தெரிவுக் குழுவால் ஒரு உருப்படியான தீர்வையும் முன்வைக்க முடியவில்லை என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும் என்றார்.

வடகிழக்கு இணைப்பு பற்றி கூறுகையில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வடக்குடன் கிழக்கு சேரக்கூடாது என்ற கருத்து ஒரு சாராரிடம் மட்டுமே இருந்தது எனலாம். அதுவும் 90 க்குப் பின் மாற்றம் பெற்றது. அக்கால கட்டத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொலை வெறித் தாக்குதல்களும் நீண்டு கொண்டு போன காணாமல் போனவர்களின் பட்டியலும் வடகிழக்கு இணைந்த மாகாணத்தில் தான் தங்களுக்கு நிரந்தர பாதுகாப்பு இருக்க முடியுமென தமிழ் மக்கள் முற்று முழுதாக நம்ப ஏதுவானது என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் போனவர்கள் பற்றிக் குறிப்பிடுகையில், 90 ஜூன் 11ம் திகதிக்குப் பின் மட்டும் 6500 பேர் காணாமல் போயுள்ளனர். செப்டம்பர் 5 ம் திகதி வந்தாறுமுனை பல்கலைக்கழகத்தினுள் இராணுவம் புகுந்து 4200 அகதிகள் முன்னிலையில் 11 வயதுச் சிறுவர்கள் உட்பட 150 பேரை கைது செய்து கொண்டு சென்றனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை எவருக்கும் தெரியாது என்று கூறினார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த பல கொலைகளுக்கு காரணமான, மட்டக்களப்பு மக்களுக்கு மிக நன்கு தெரிந்த கொலைகாரர்களான கப்டன் கறுவராச்சி, காப்டன் முனாஸ் (டயஸ் ரிச்சாட்) என்பவர்கள் மாத்திரம் 350 க்கும் மேற்பட்ட கொலைகள் செய்துள்ளனர். இவர்களை விட மேஜர் மஜீத், மேஜர் முகமட் சில்வா ஆகியோரும் கிழக்கு மாகாண மக்களுக்குத் தெரிந்த பிரபல்யமான கொலைகாரர்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக 2000 ஜே வி பி உறுப்பினர்களின் சாவுக்குக் காரணமான மேஜர் ஜெனரல் அல்கம தற்போது மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மாற்றமாகி வந்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

"இவைகள் பற்றியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச இராணுவம் நடாத்தும் அடாவடித்தனம் பற்றியும் பாராளுமன்றத்தில் பலமுறை கேள்வி எழுப்பினேன். பதிலாக எப்போதும் கூச்சல்களே எழுந்தன." □

# நண்பனும் எதிரியும்

**நகைச்சுவையான இரண்டு கவிதைகள்** — ஜெ

எந்தவொரு போராட்டத்திலும் எதிரி யார், நண்பன் யார் என்ற தெளிவு அவசியம். போராட்டத்தின் இலக்கும் பாதையும் பற்றிய தெளிவு இல்லாதபோது நியாயத்தின் பேரால் அநீதிக்கெதிராகத் தொடுக்கப்படுகிற போராட்டமுங்கூட, நண்பர்களையும் எதிரிகளையும் குழப்பிக் கொள்ள இடமுண்டு. இது தேசிய விடுதலைப் போராட்டத்திலும் நடக்கலாம், பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் போக்கிலும் நடக்கலாம். போராட்டத்தின் இலக்கை விடப் போராட்டமே முக்கியமாகிற ஒரு வக்கிரம் ஏற்படும் போது நண்பன் எதிரியாகலாம், சரி பிழையாகலாம், உண்மை பொய்யாகலாம். எல்லாமே தலை கீழானாலும், எல்லாவற்றையும் விளக்குவதற்கான கொள்கை விளக்கங்கள் தரக்கூடிய அறிஞர்கள் எக்காலத்திலும் எவ்விடத்தும் இருப்பார்கள்.

ஐரோப்பாவின் இடதுசாரி இயக்கங்களில் மட்டுமன்றி, உலகின் பல்வேறு பகுதிகளிலும், சித்தாந்தத் தூய்மையின் பேரிலும் சரியான போராட்ட மார்க்கத்தின் போரிலும், கட்சிகளும் இயக்கங்களும் பிளவுண்டு போவதுண்டு. கருத்து வேறுபாடுகள் பிளவுகட்கு வழிகோலக் கூடுமேயாயினும் நண்பனையும் எதிரியையும் குழப்பிக் கொள்ளும் நிலை ஏற்பட அவசியமில்லை. ஐக்கியத்தைப் புறக்கணித்துப் போராட்டத்தை வலியுறுத்தும் போது மட்டுமே இத்தகைய குழப்பங்கள் நேருகின்றன. சில சமயங்களிற் பிற இயக்கங்களுடனும் எதிரியுடனுங் கூடச் சகிப்புடன் நடக்கும் இயக்கமொன்று, தன்னுள் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்க, மிகுந்த கடுமையுடன் செயல்படுவதுண்டு. சில சமயங்களிற் சினேகமாகத் தீர்க்கக் கூடிய முரண்பாடுகள் பகைமையுடன் கையாளப்படுகின்றன. அது மட்டுமின்றி, இல்லாத பகைமைகளும் உருவாக்கப் படுகின்றன. இது தொடர்பான இரண்டு கவிதைகளைப் பாருங்கள்: ஒன்று சுகுமாரின் தமிழ்க் கவிதை. மற்றது எரிஷ் fரீட் எழுதிய ஜேர்மன் கவிதையொன்றின் தமிழாக்கம்.

## ஒரு கவிதை

தோழரே,
துப்பாக்கியை உயர்த்தும்.
வலது தோளில்
உதைப்பை வாங்க ஏதுவாக
நடுவில் உள்ள
கோட்டிடை வெளியில்
நேரே, நேராக மட்டுந்தான்
பாரும்.
எதிரிதானே அது?
வலது ஆள்காட்டி விரலைப் பின்னோக்கி இழும்.
சரியாகக் குறிபார்த்தால்
ஒரு குண்டு போதும் தோழரே.

சமயத்தில்
எதிரி கிடைக்கா விட்டால்—
ஊரில் மனிதர்களும்
மின்சாரக் கம்பங்களும் உண்டு.

அதுவும் கிடைக்காதபோது—
நெறி பிறழாத ஒரு தோழனை...

துப்பாக்கி சூடாறக் கூடாது பாரும்.
நியாயப்படுத்தத் தலைமைப் பீடமும்
பிரசுரம் அடிக்க வெளியீட்டுப் பிரிவும்
உள்ளன தோழரே—

விடுதலைப் பாதையில்
வீறு நடை போடும்.

இக் கவிதை எந்தவொரு ஈழ விடுதலை இயக்கத்தையும் மனதிற் கொண்டு எழுதப்பட்டிருக்க அவசியமில்லை. முக்கியமான போராளி இயக்கங்கள் அனைத்திற்குமே பொருந்தக் கூடிய கவிதை இது. இத்தகைய தவறுகள் பிற நாடுகளின் விடுதலை இயக்கங்களிலும் நடந்திருக்கக் கூடியன. தவறுகளைத் தவறுகளாக ஏற்காமற் தத்துவ விளக்கங்கள் தரும்போது தவறுகள் மேலும் பெருக நேரிடுகிறது. போராட்டமும் இயக்கமும் சீரழிகின்றன. இக் கவிதை பற்றி எந்தவொரு இயக்கமும் சினக்குமேயானால், இந்தத் தொப்பி அந்தத் தலைக்கு பொருந்துகிறது என்றே கருத முடியும்.

எரிஷ் Fரீட் பிறப்பால் ஒஸ்ற்றியர். அரசியற் காரணங்கட்காகப் புலம்பெயர்ந்து வாழும் இவர் ஏகாதிபத்திய எதிர்ப்பு, பெண் விடுதலை, ஜனநாயக உரிமைகள் என்பன பற்றிய ஆழமான கருத்துகளைத் தன் கவிதைகளில் மிகுந்த நகைச்சுவையுடன் எழுதும் ஒரு இடதுசாரி சிந்தனையாளர். இடதுசாரிக் கட்சிகளிலும் குழுக்களிலும் காணப்படும் குழுவாதமும் ஒருமுனைவாதமும் பற்றி மிகவும் கடுமையாகவே இவரது கவிதைகள் விமர்சிக்கின்றன. சுயலாபத்துக்காகத் தாம் செய்கிற காரியங்கட்குத் தத்துவார்த்த விளக்கங்கள் தருகிற காரியமும் இவரது தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. 'நாடற்ற கவிதைகள் நூறு' (**One hundred poems without a country**) என்ற பெயருடைய இவரது கவிதைத் தொகுப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பினின்று கீழ் வரும் கவிதை தமிழாக்கப்பட்டது.

## தாக்கும் வலிமையைப் பேணுவதற்கான உபதேசங்கள்

எதிரிகள்
மிகவுந் தொலைவில் உள்ளனர்.
அத்துடன், பெரும்பாலும்,
நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

எனவே உம் நண்பர்களை
எதிரிகள் என்பீர்.
அவர்களது பற்களைக்
குத்தி உதிர்ப்பீர்.

இவ்வாறு,
அவர்களை எதிரிகளாக்கிவிட
உம்மால் இயலும்.
அதன் பின் நீவீர் புளுகலாம்:

"அவர்கட்கெதிரான போராட்டத்தில்
எழுந்து நின்று
முதல் உதை கொடுத்தவன்
நானே!"

– Erich Fried
(தமிழாக்கம் : மணி)

இக் கவிதையை ஈழவிடுதலை இயக்கங்கட்கும் பொருத்திப் பார்க்கலாம். அவ்வாறே. சுகுமாரின் கவிதையைச் சில இடதுசாரிப் போராட்ட இயக்கங்கட்கும் பொருத்திப் பார்க்கலாம். சீர்குலைவை எதிர்நோக்கும் ஒவ்வொரு இயக்கத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் அமைப்பிலும் இத்தகைய வக்கிரமான போக்குக்களை அடையாளங் காணலாம். இவற்றைப் பற்றி இரண்டு கவிஞர்களும் மிகவும் ஏளனமாகவே எழுதியுள்ளனர். ஆயினும் இந்த ஏளனம் எட்ட நின்று கிண்டல் செய்யும் ஏளனமல்ல. இந்த இயக்கங்களது இலக்குக்களுடனான உண்மை அனுதாபமும் இயக்கங்களின் சீரழிவு பற்றிய ஆழ்ந்த கவலையுமே நகைச்சுவை மூலம் தம்மை வெளிக் காட்டிக் கொள்கின்றன. எந்த விதமான கோபா வேசமான பிரகடனமும் கண்டனமும் செய்ய முடியாத ளவுக்கு, ஏளனம், இந்த நிலவரங்களை, வேண்டு மாயின் ஓரளவு மிகைப்படுத்தியுங் கூட, அபத்தமா னவை என்று அடையாளங் காட்டி நம்மை மேலும் சிந்திக்கத் தூண்டுகின்றது.

நகைச்சுவை என்பது மிகவும் கனதியான விஷயந்தான். □

# லண்டன் தரிசனங்கள் *

## சிவசேகரம்

தக்கிடதோம் தரிகிடதை தம்தோம்
மிக்க பணம் தருவரை உ–வந்தோம்
காசுத் தொகைக் கேற்றபடி
கூசாமற் பாதங் க–
தக்களிக்கும் டிப்ளோமா தந்தோம்

ஸுப்பர்மார்க்கெற் மங்கை ஸூஸி
எப்போதும் பின்தொடருங் காசி
முத்தமிடப் பார்க்கையிலே
சத்தமிக ஏசியபின்
செப்புகிறான் "அவள் எளிய வேசி"

செல்வாக்கில் ஆசைமிகும் ஞானம்
செல்விக்கு வந்தது கல்–யாணம்
திக்கெட்டும் தேடியபின்
வைக்க இடங் கண்டார், நான்
சொல்கிறன் கேள்: வெம்பிளி மை–தானம்

வாய் வழியே சாய் வாவ–ழைத்த–
தாயுரைத்த கணபதி சிற்–பத்தை
வைக்க இடம் ஏதென்ற
சிக்கலைய–விழ்த்தாராம்
சாய் படத்தின் காலடியில் வைத்து

சீதனமாய் வீடென அ–ளந்து
நாதனையும் லண்டன் கொ–ணர்ந்து
சேர்த்ததன் பின் சொன்னாராம்
ஊர்த் தரகர் "வீட்டுக்கு
வீதம் மோட்கேஜ் தொன்னூற்றைந்து"

( * மகாகவி உருவாக்கிய 'குறும்பா' எனும் நகைச்சுவைச் சந்தப் பாட்டின் அமைப்பில் எழுதப்பட்டுள்ளது.)

சுந்தர ராமசாமியின் பார்வையில்

# ஈழத்து இலக்கியம்

யசோதரன்

**நவீன தமிழ் இலக்கியத்தில் மிக முக்கியமான படைப்பாளியான சுந்தர ராமசாமி அவர்கள் 17–09–1993ல், லண்டன் தமிழ் ஸ்தாபனங்களால் ஒழுங்கு செய்யப்பட்டு, லண்டன் பல்கலைக் கழக கீழைத்தேய ஆபிரிக்க கல்வி நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்தில் "நவீன தமிழ் இலக்கியத்தின் போக்குகள்" என்ற தலைப்பில் உரையாற்றிய பின்னர் இடம் பெற்ற கலந்துரையாடலில் ஈழத்து இலக்கியம் பற்றித் தெரிவித்த கருத்துகளின் குறிப்பு**

தமிழ் நாட்டு வாசகர்களுக்கு ஈழத்து இலக்கியம் எந்த அளவிற்கு கிடைக்கவேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த அளவிற்கு அங்கு அவை கிடைப்பதில்லை. எனக்குத் தெரிந்த ஒரு இருபது இருபத்திஐந்து வருடங்களாக ஈழத்து எழுத்தாளர்களுக்கு புத்தக வெளியீடு ஒரு பிரச்சனையாகவே வந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் போதுமான இலக்கியங்கள் தமிழகத்தில் கிடைப்பதில்லை. இப்போது ஒரு பதினைந்து, இருபது வருடங்களாக, சில தனிநபர்களின் முயற்சி காரணமாக, முக்கியமாக திரு.பத்மநாபஐயர் போன்றவர்களின் முயற்சிகள் காரணமாக தமிழ் ஈழத்திலுள்ள சிறந்த படைப்புக்கள் தமிழகத்திற்கு வரவும், தமிழகத்திலுள்ள தீவிரமான படைப்புக்களை ஈழத்திலுள்ள ஆழ்ந்த வாசகர்களும், முக்கியமான எழுத்தாளர்களும் படிப்பதற்குரிய உறவு ஏக தேசமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.


1958ல் அல்லது 1959ல் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டிற்கு திரு.கைலாசபதி வந்திருந்தார். அப்போது அவர் ஈழத்திலுள்ள இலக்கியம் சார்ந்த செய்திகளை எனக்கும், என்னோடுள்ள நண்பர்களுக்கும் சொன்ன பொழுதுதான் அங்கு பொருட்படுத்தவேண்டிய எழுத்தாளர்கள் உள்ளார்கள் என்ற எளிய உண்மை தெரியவந்தது. அன்றிலிருந்து தனிப்பட்ட முறையில் நானும் எனது நண்பர்களும் முக்கியமாக மகாகவி, கைலாசபதி, சிவத்தம்பி போன்ற பல எழுத்தாளர்களது புத்தகங்களைப் படித்துக்கொண்டு வந்துள்ளோம். 70களின் பின்னால் முக்கியமாக தளையசிங்கத்தைச் சொல்லவேண்டும். அவரது பல நூல்கள் தமிழகத்தில் அச்சேற்றப்பட்டன. அவரைப்பற்றி பல கூட்டங்களில் பேசப்பட்டன. கட்டுரைகள் முன்வைக்கப்படடன. அதன்பின்னர் 'அலை' பத்திரிகை மூலம் யேசுராசா, டொமினிக் ஜீவா, டானியல், கணேசலிங்கம் இப்படி— முக்கியமாக சேரன், ஜெயபாலன் போன்றவர்களின் புத்தகங்களை தமிழ் நாட்டிலுள்ளவர்கள் படித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தரத்தோடுதான் நாம் ஈழத்து இலக்கியத்தையும் பார்க்க வேண்டும். ஒரே மொழிசார்ந்த இலக்கியம் வெவ்வேறு அனுபவங்கள் இருந்தாலும் கூட இந்த நெருக்கடிகள் ஆரம்பமாவதற்கு முன்னால் சமூக ரீதியான பிரச்சனைகளும் ஏக தேசமாய் ஒரே தளத்தைச் சார்ந்தவை.

எங்களுடைய எழுத்துக்களில் பொதுவாக ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது நடுநிலையில் நின்று பேசமுடியாத, பல்வேறுபட்ட களங்களின் இணைப்பாக இருக்கக்கூடிய, உலகத்தில் பிற மொழிகளில் படைக்கப்பட்டிருக்கக்கூடிய, முக்கியமாக ஆங்கில மொழிமூலம் தெரிய இன்று வாய்ப்புள்ள இலக்கியங்களைப் படிக்காததனால், ஏற்படக்கூடிய தடுமாற்றங்கள் எங்களுடைய இலக்கியத்தில் பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற தடுமாற்றங்கள் இல்லாத இலக்கியமாக ஈழத்து இலக்கியங்கள் எனக்கு ஆரம்பத்தில் தெரிந்தன. இன்று சில குறிப்பிட்ட எழுத்தாளர்கள் மீது விசேடமான அக்கறை கொண்டுள்ளேன் முக்கியமாக மு.தளையசிங்கம். அவரைப்பற்றி நான், தமிழில் பாரதிக்குப் பிந்தி வந்த மிக முக்கியமான சிந்தனையாளர் என நான் பல கட்டுரைகளில் கூறி நிறுவ முயன்றுள்ளேன். வாழ்க்கையின் முழுமை சார்ந்து தன்னுடைய காலத்தில் சிந்தித்த மிக முக்கியமான சிந்தனையாளர் என தளையசிங்கத்தில் எனக்கு மதிப்பு இருக்கிறது. தமிழ் சமூகமோ ஈழசமூகமோ அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல. நாம் இன்று தீவிரமாக அவரை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்ற

கருத்தை தமிழ் வாசகர்கள் முன்வைத்தேன். அவருடைய காலத்தில் அவர் உலகம் முழுதும் நடக்கக்கூடிய காரியங்களில் கவனம் கொண்டிருந்தார் என்பதற்குரிய தடயங்கள் அவர் எழுத்திலே இருக்கின்றன. தத்துவம் சார்ந்த விடயங்கள், தத்துவத்தை இறுக்கமாகப் பின்பற்றிக் கொண்டிருப்பவர்கள் அனுசரிக்கக்கூடிய காரியங்கள் உலகத்தில் தோல்வி அடைகின்றன அல்லது தோல்வி அடையக்கூடும் அது சம்பந்தமான நிகழ்வுகளில் அவருக்குப் போதுமான திருப்தி கிடைக்கவில்லை. லோகாயுதமான தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்து ஒரு மேலான சமுகத்தை உருவாக்கமுடியாது. அதற்கு மேல் மனிதனுக்குச் சில ஆத்மீகப் பிரச்சினைகள் இருக்கின்றன. பொருளாதாரம் தாண்டிய சில வேட்கைகள் இருக்கின்றன. அந்த வேட்கைகளையும் கணக்கில் எடுத்துச் சிந்தித்தால்தான் ஒரு முழுமையான சமுகத்தைப் பார்த்துப் போகக்கூடிய பாதையை நாம் உருவாக்க முடியும் என்று ஆசை சார்ந்த கனவுகளையும், கருத்துச் சார்ந்த திட்டங்களையும் வைத்துக் கொண்டிருந்தார். இலக்கியத்தை இரண்டாம் பட்சமாகப் பார்த்தார். இலக்கியம் என்பது செல்லுபடியாகாது. வாழ்க்கையில் நடந்த உண்மையான சம்பவங்கள், மனிதனை மிக மோசமாக அலைக்கழித்த நிகழ்வுகள் இவைபற்றிச் சொல்லக்கூடிய உண்மையான பதில்கள் தான் இனிமேல் இலக்கியமாகக் கருதப்படும் என்ற கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தார்.

இன்று இருக்கக்கூடிய பல்வேறுபட்ட கலைஞர்களது சாதாரணமான கவிதைகளைப் படிக்கும்போது பத்து வருடங்களாக அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளை அக்கவிதைகள் நன்றாகப் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. என்றாலும்கூட, நிகழ்ந்திருக்கக்கூடிய நிகழ்வுகளுக்கு அனுசரனையான படைப்புக்கள் ஈழத்து இலக்கியத்தில் வரவில்லை என்ற எண்ணம் எனக்கு இருக்கின்றது. ஒருவேளை இந்த நெருக்கடிக்கு ஏதாவது ஒரு தீர்வு ஏற்பட்டு, காலத்தின் இடைவெளி அவர்களுக்குக் கிடைத்து, பின் திரும்பிப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பத்தில்தான் மிக மேலான படைப்புக்கள் வருவதற்கான வாய்ப்பு இருக்குமோ என நினைக்கிறேன்.

ஆரம்பகாலத்தில் சேரனது கவிதைகள் மிகுந்த நம்பிக்கையை அளித்தன. இப்போ இடைக்காலத்தில் அவர் கவிதைகள் சோர்வைத் தருகின்றன.



சுந்தர ராமசாமி

இருந்தாலும்கூட ஈழத்து எழுத்தாளர்களில் என்னளவில் தன்னை மிக முக்கிய கவிஞனாக உருவாக்கிக் கொள்ள அவசியமான தயாரிப்புக்களை அவர்தான் கொண்டிருக்கிறார் என நினைக்கிறேன். அவருக்கு தான் செய்து கொண்டிருக்கின்ற காரியமானது போதாது, இதைவிட மேம்பட்ட தளங்களில் நாம் செயற்பட வேண்டும் என்ற உணர்வும், பிற கவிஞர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயமும் அவருக்கு இருக்கிறதென நினைக்கிறேன். ஆனால் அவர் படைப்புக்கள் அந்த அளவிற்கு நம்பிக்கை தரக்கூடியனவயாக இல்லை. ஜெயபாலனது கவிதைகள் சமீபகாலத்து வாழ்க்கை முறைகளை நன்றாகவே பிரதிபலித்திருந்தாலும் அவர் அடிப்படையில் றொமான்ரிக்கான கவிஞர். நான் றொமான்ரிசத்திற்கு எதிரான மனோபாவம் கொண்டவன். இருந்தாலும் வாழ்க்கைக்கான நெருக்கடிகளை நன்றாகவே சித்தரிக்கின்றார். மொத்தத்தில் ஈழத்து இலக்கியம் திருப்தியைத் தந்திருக்கிறது. ஆனால் இன்னும் மேலான படைப்புக்கள் அங்கிருந்து வந்திருக்க வேண்டும் என்ற ஒரு குறையும் எனக்கு இருக்கிறது. □

# பிரித்தானியனின் பரிசு

சிவா. வித்யாதரன்

கண்ணன் உரக்கக் கொட்டாவி விட்டபடி எழுந்த போது விடிந்து வெகு நேரமாகிவிட்டது. சுவரில் திருவள்ளுவர் படம் போட்ட கலண்டர் 'கடீ திங்கள், சித்திரை' என்று சொன்னது. கலண்டரைக் கிழித்து மூன்று நாட்கள். அவன் மூன்று தாள்களைக் கிழித்ததும் திகதி சரியாக 'கரு. வியாழன்' என்று வந்து நின்றது. 'டவுன் வித் தமிழ் இம்பீரியலிஸ்றஸ் அன்ட் தெயார் பப்பெற்ஸ்' என்று முணுமுணுத்துக் கொண்டே அலுமாரிக்குள் வைத்திருந்த ஷேக்ஸ்பியர் படத்தை, இல்லையில்லை, செகப்பிரியரின் படத்தை எடுத்து முத்தமிட்டான். யன்னலூடாக யாராவது பார்த்தாலும் என்ற பயம் எழுந்தது. படத்தை உள்ளே வைத்து விட்டு வெளியே எட்டிப் பார்த்தான். யாரும் இல்லை. 'நல்ல வேளை' என்று நினைத்துக் கொண்டு அவிழ்ந்த வேட்டியை இறுகக் கட்டத் தொடங்கினார்.

(கதையை மேலும் தொடர்வதற்கு முன்பு கண்ணனைப் பற்றி சிறிது சொல்ல வேண்டும். கண்ணனுடைய முழுப் பெயரான க்றிஸ்ற்றி எட்வர்ட் ஸ்மித், கிறித்தி எத்துவாத்து சிமித்து எனப் பதிவாகியிருந்தது. இங்கிலாந்திலிருந்து வன்னிப் பல்கலைக் கழகத்தின் எந்திரவியற் பீடத்தில் பட்டப் படிப்புக்காக வந்திருக்கிறான். சொந்த ஊர் வுல்வஹம்ட்டன். உலகத் தமிழர் உயர் கல்வி உபகார நிதி மையத்தின் வ.உ.சிதம்பரப்பிள்ளை புலமைப் பரிசில் பெற்று தமிழர் ஒன்றியப் பேரரசின் ஈழ மாநிலத்தில் விதேசிய மாணவர்களுக்காக அமைந்த பல்கலைக் கழகமான வவுனியா வளாகத் திற்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறான்.

பிரபாகர ஈழனின் உலகப் பேரரசு. தமிழ் உலகின் முதல் மொழியாகி சைவசித்தாந்தம் உலகின் பெரும்பான்மை மதமாகி விட்டது. வேட்டி சால்வையும் சந்தனப் பொட்டும் சேலையும் குங்குமமும் குடுமியும் கொண்டையும் நாகரிகத் தின் சின்னங்களாகி விட்டன. இதை விட வேறு விபரங்கள் தேவையென்றால் அந்தந்த நேரத்திற்கு எழுதிக் கொள்கிறேன். க்றிஸ்ற்றி ஸ்மித் தன் பெயரை கண்ணன் என்று மாற்றிய காரணம் தமிழருக்குப் பரிச்சயமானதும் விளங்கக் கூடிய துமான ஒரு பெயர் இல்லாமல் வாழ்க்கையில் முன்னேற முடியாது என்பது தான். மூன்றாம் பிரபாகர ஈழனின் காலத்தில் தமிழ் தூய ஒரிஜினல் சங்கத் தமிழ் என்பதால், அந்த மொழியிலிருந்து இன்றைய தமிழுக்கு, மிகுந்த சிரமத்துடன் மொழி பெயர்க்கிறேன் என்பதையும் கூறிக் கொள்ள வேண்டும்.)

'நாளைக்கு வெள்ளிக்கிழமை' என்று கண்ணன் தனக்குள் மகிழ்வாகச் சிரித்துகொண்டான். வியாழன் அரைநாள் வேலை, வெள்ளி முழுநாளும் லீவானதற்குக் காரணம் உலகம் இஸ்லாமிய நெறியை தழுவியதல்ல என்று உங்களுக்கு விளங்கும். கணிசமான ஆங்கிலேயர்களையும் வட அமெரிக்கர்களையும் அவுஸ்ரேலியர்களையும் போல் கண்ணனும் ஒரு சைவன் தான். அவனுடைய பாட்டனார் ஈசுவரன் மதம் மாறியதாக அவனுடைய தகப்பனார் சிவா சொன்னார். பாட்டனாருடைய பெயர் தமிழில் இடட்டிலி இசுப்பெஞ்சர் சிமித்து எனவும் சிவாவின் பெயர்

என்ன குழப்பமாக இருக்கிறதே என்று யோசிக்கிறீர்கள்?

கதை நடக்கும் காலம் திருவள்ளுவர் ஆண்டு 2112, அதாவது கிபி 2081 என்று பழைய உலகக் கலண்டரில் சொல்லப்படும் ஆண்டு. தி.ஆ 2031 க்கு (அதாவது கிபி 2000) பிறகு உலகம் மிகவும் வேகமாக மாறிவிட்டது. அந்த விவரம் எல்லாம் இங்கே எழுதக் கட்டாது. இப்போதைக்கு நீங்கள் அறிய வேண்டியதெல்லாம் தமிழரின் ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள்கிறது: ஈழத்தையும் தமிழகத்தையும் மட்டுமன்றி, இராஜராஜ சோழன் ஆண்ட கலிங்கமும் சாவகமும் தாண்டி முழு உலகையும் கைப்பற்றி விட்டது முதலாம்

சிமிசன் உவோற்றர் சிமித்து எனவும் பதிவாகி இருந்தன. கண்ணனுடைய தாயார் கலா (கரோலயின்) ஒரு நாத்திகக் குடும்பத்திற் பிறந்தவர். சிவாவின் பிடிவாதத்தால் லண்டன் சிவன் கோயிலில் சைவ முறைப்படி தாலி கட்டித் திருமணம் செய்து கொண்டவர். கலா சீதனமாக அதிகங் கொண்டு வராததால், சிவா அவருடைய குடும்பத்துடன் அதிகம் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. கண்ணனுக்கும் அவர்களைப் பற்றி அதிகம் தெரியாது. "மீசை, குடுமி இல்லாத சாதிகள்" என்று தன் தகப்பனார் குறிப்பிடுவது தாயாரின் உறவினர்களைத்தான் என்று மட்டும் ஊகித்துக் கொண்டான்.

முதலாவது விரிவுரைக்குப் போவதானாற் குளித்துவிட்டு போக முடியாது. படிப்பை விடக் குளிப்பு முக்கியம் என்று ஔவைப் பாட்டி (கண்ணனுடைய சொந்தப் பாட்டி, சொந்தப் பேர் வயலெற்று) ஓயாமல் சொல்லுவார். எனவே முதலாவது விரிவுரையைத் தியாகம் செய்வதென்று முடிவெடுத்தான். கண்ணனுக்கு ஆங்கிலச் சினேகிதர் என்று வகுப்பில் ஒருவரும் இல்லை. ஆங்கிலத்தை தாய் மொழியாகக் கொண்ட அவுஸ்திரேலியன் ஒருவன் இருந்தான். அவன் ஆங்கிலேயர்களை மிகவும் இழிவாகவே நடத்துவான். ஐரிஷ்காரன் ஒருவனுக்கு ஆங்கிலம் தெரியும். ஆனாலும் தமிழில் பேசாத போது கெல்ற்றிக்கிற் பேசுவான். கண்ணனுக்குக் கெல்ற்றிக் வராது. சினேகிதமான ஒரு அமெரிக்கன் இருந்தான். தமிழர்களுடன் போட்டிபோட முடியாது என்று திரும்பிப் போய் விட்டான். வகுப்பில் இருந்த மற்ற ஆங்கிலேயர்கள் வேறு சாதிக்காரர்கள். இவனுடன் நெருங்கிப் பழக மாட்டார்கள். வகுப்பில் தமிழர்கள் அரைவாசிப் பேர். அயல்நாட்டவர்களை ஏளனமாவே நடத்துவார்கள். ஓரிருவர் கொஞ்சம் தயவுடன் நடந்து கொள்வார்கள். ஆனாலும் சமமாக நடத்துகிறார்கள் என்று சொல்ல முடியாது.

கிட்டி, கிளித்தட்டு, சிலம்பம், சல்லிக்கட்டு, சடுகுடு போன்ற உலகப் பிரசித்தி பெற்ற விளையாட்டுகளில் எல்லாம் தமிழர்களே முன்னணியில் நிற்பது பற்றி மிகவும் அகம்பாவம் இருந்தாலும் வெளியிற் காட்டிக் கொள்ளாமல் மற்ற நாட்டவர்கள் முன்னேறி வருவது பற்றி பரிவுடன் பேசிக் கொள்வார்கள். ஔவைப் பாட்டிக்கு தமிழன் என்றாலே தாங்க முடியாத கோபம். எப்போதும், "தமிழனுக்கு இரட்டை நாக்கு" என்று ஏசுவார்.

எப்படியானாலும் யாராவது தமிழனிடந்தான் விரிவுரைக் குறிப்புக்கு கெஞ்ச வேண்டும். தோளிற் துவாயைப் போட்டுக் கொண்டு தலைமயிரை உச்சிக்குமேலாகக் கட்டியபடி குளியலறைக்குப் போனான்.

விரிவுரைக் கூடத்தை நோக்கிக் கண்ணன் போய்க் கொண்டிருந்த போது வழியில் போராசிரியர் பெருஞ்சித்தனார் வந்து கொண்டிருந்தார். அவர் கண்ணில் அகப்படாமல் தப்புவது கடினம் என்பதாற் 'துணிந்த பின் மனமே துயரங்கொள்ளாதே' என்ற ஒரு ஆங்கில வீடியோ சினிமாப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டு முன்னேறினான்.

பெருஞ்சித்தனார் "கிறித்தி சிமித்து, வகுப்புக்குப் பிந்தி விட்டாயா?" என்று கொச்சையாக ஆங்கிலத்தில் கேட்ட போது கண்ணனுக்கு தன்னையே நம்ப முடியவில்லை. ஒரு தமிழர், ஒரு பேராசிரியர், அதுவும் எந்திரவியல் பேராசிரியர் ஆங்கிலம் பேசுவதை இதுவரை அவன் கேட்டதேயில்லை. தமிழர்கட்கு வேறு மொழிகள் தெரியாது என்றுதான் அவனுக்கு எல்லோரும் சொன்னார்கள். உலகின் முன்னூற்று இருபத்தி நான்கு நாடுகளில் இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் அரச மொழியாக தமிழே இருக்கிறது. மற்ற நாடுகளிலும் தமிழ் இரண்டாவது கட்டாய மொழியாகப் பயிற்றப்படுகிறது. தமிழர்கட்கு வேறு மொழி பயில என்ன அவசியம் என்று தான் அவன் நினைத்துக் கொண்டான்.

**தமிழ் உலகின் முதல் மொழியாகி சைவ சித்தாந்தம் உலகின் பெரும்பான்மை மதமாகி விட்டது. வேட்டி சால்வையும் சந்தனப் பொட்டும் சேலையும் குங்குமமும் குடுமியும் கொண்டையும் நாகரிகத்தின் சின்னங்களாகி விட்டன.**

அவனுக்கு சுயநினைவு திரும்பியதும், "இல்லை ஐயா. நேற்று படுக்க முந்தி— இல்லை, பிந்தி—" என்று தமிழில் தடுமாறிய போது, பெருஞ்சித்தனார் "எனக்கு உன்னுடன் ஆங்கிலத்திற் பேச விருப்பம்" என்றார். கண்ணன் கள்ளன் போல் முழித்த போது, "ஆங்கிலம் ஒரு அருமையான இலக்கிய மொழி. எனக்கு அதைப் பற்றி அறிய மிக ஆவல். நாளை பின்னேரம் பூசை முடிந்த பிறகு வளாகக் கோவிலடியில் உன்னுடன் பேசலாமா?" என்று கேட்டார். கண்ணனுக்கு உடம்பெல்லாம் புல்லரித்துப் போய் விட்டது. அரை மயக்கத்தில் "ஓம் ஐயா" என்று சொல்லி விட்டு நித்திரையில் நடப்பவன் போல விரி வுரை மண்டபத்தை வந்தடைந்தான்.

அயல் மாணவர்கட்கான விஷேட தமிழ் வகுப்பு முடிந்து விரிவுரையாளர் வெளியேறியதும், அறைக்குள் நுழைந்தான். அடுத்த விரிவுரை கட்டிடக் கலை பற்றியது. பிறகு கணிதம், கணனியியல். கரும்பலகையில் எழுதப் பட்டவற்றை அவனது கை இயந்திரம் போல் தாள்களில் எழுதியது. கண்ணனின் மனமோ ஆங்கிலப் புரட்சிக் கவிஞன் பார்ட் டி. டாஷ் இயற்றிய ஆங்கில இசைப் பாடலை மீண்டும் மீண்டும் அசை போட்டது.

"ஆங்கிலம் எங்களின் பாஷை
அதன் மேலெங்களுக்கு ஆசை
ஈங்கிது போல்வது எங்கேனும் உள்ளதோ
வீங்குது வீரத்தில் மீசை"

நாளைய சந்திப்பை நினைத்தவாறே கனவில் மிதந்தபடி தனது அறைக்குப் போய் கட்டிலில் குப்புற விழுந்தான். (இன்னும் வரும்)

# கவிதை பற்றி

## மொஹமத் தார்வீஸ்

தமிழில்: யமுனா ராஜேந்திரன்

நேற்று
மேகத்திற்குப் பின்னாலிருந்த நட்சத்திரம்
பற்றிப் பேசினோம் பிற்பாடு
எம் கண்ணீரில் குளித்தோம்.

நேற்று திராட்சைச் செடிகளோடு
இரவு நிலவோடு
தலைவிதியோடு கலகம் செய்தோம்.
பிற்பாடு
பெண்களோடு காதல் புரிந்தோம்.

நேரம் தடைப்பட்டது
கையாம் மது அருந்தினான்
அவனது போதைப் பாடல்களின் கீழ்
நாங்கள்
என்றென்றும் ஏழைகளாக இருக்கிறோம்.

கவிகளே! நண்பர்களே!
நாங்கள்
ஒரு புதிய உலகத்தில் இருக்கிறோம்.

சாவுதான் கடந்து போனது
இந்த அணு மாற்றம் காற்றின் யுகத்தில்
எவரெல்லாம்
கவிதை எழுதினார்களோ அவரெல்லாம்
தீர்க்க தரிசிகளை உருவாக்கினார்கள்

எம் பாடல் நிறமற்றது
ஸப்த மற்றது
சுவையற்றது

கவிதை வீட்டுக்கு வீடு
ஒரு விளக்கை எடுத்துச் செல்லவில்லையானால்
ஏழைகளுக்கு அதன் 'அர்த்தம்'
என்னவென்று விளங்கவில்லையானால்
அதை விட்டொழிப்பது
உத்தமம்.
நிரந்தரமான மௌனத்தை
வேண்டுவது மிக நன்று.

உழைப்பாளி கை சிற்றுளிபோல
கவிதை வேண்டும்
தீவிரவாதியின் கைவெடிகுண்டாக
விவசாயிகளின் கைகளுக்கிடையில்
கலப்பையாக
ஒரு சட்டையாக கதவாக
ஒரு சாவியாக
கவிதை ஆக வேண்டும்

யாரோ ஒருவர் சொன்னார்

என்னை நேசிப்பவரை என் கவிதை
மகிழ்ச்சியிலாழ்த்த வேண்டும்
என் எதிரிகளை கோபமூட்ட வேண்டும்
அதன் பின்னே நானொரு கவிஞன்...
ஆனால் என்னைப் பொறுத்து_ □

# இழப்பு

## புஷ்பராஜன்

எதையெதையோ இழந்த துயரில்
மனம் அலைவுற
தூக்கமோ தொலைவில்

மூடிய விழியுள்
ரி.வியில் தோன்றிய
சர்வ தேச ஓட்டப் பந்தய வீரர்

ஆரவார அலைகளிடை
வெற்றி வீரர் தம் தேசக் கொடியேந்தி
வலம் வருவர்.

பதக்கமும், பூங்கொத்தும்
பின்னால் எழும் தேசியக் கொடிக்கும்
தேசிய கீதத்திற்கும்
விறைத்து நின்று கண்கள் மல்க
பெருமிதம் கொள்வர்.

எனது பிரஜையே இக்கொடி எனதே
பரஸ்பரமாய்
பெருமையும் வாஞ்சையும்

மகத்துவ இழப்பின் வெறுமை உறுத்த
ஏக்கம் குதிர மன அலைவு.

# இன்னும் முயற்சிக்கப்படாத புதிய பாதை நோக்கி

## இரண்டாவது ஜோன் போல் போப்பாண்டவருடன் ஒரு நேர்முகம்

கேள்வி: பழைய யூகோஸ்லாவியாவில் நடக்கும் யுத்தத்தில் இருந்து நாம் தொடங்குவோம். பால்டிக் பிரதேசத்தில் நடக்கும் யுத்தத்தில் அன்னிய தலையீட்டை 'மனிதாபிமான ரீதியிலான தலையீடு' என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். இதனால் ராணுவ ரீதியிலான தலையீட்டை நீங்கள் ஆதரிப்பதாக மற்றவர்கள் கருதுகின்றார்கள் அது உண்மைதானா?

பதில்: அப்படி இல்லை. நான் இங்கே ஆக்கிரமிப்பைப் பற்றித் தான் பேசுகிறேன். பிற மக்களுக்குத் துன்பம் விளைவிப்பதன் வாய்ப்பை நாம் மறுக்க வேண்டும். இது மிக நுட்பமான வரையறை. மரபு ரீதியான தேவாலய கோட்பாட்டின்படி நீதியான யுத்தம் தற்பாதுகாப்புக்கான யுத்தத்தில் ஒவ்வொரு தேசமும் தன்னைப் பாதுகாப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. புனித அகஸ்ரினால் இந்த நெறிமுறை வகுக்கப்பட்டது. இரண்டாவது வத்திக்கான் (VATHIKAN)ஆல் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

கேள்வி: ஆனால் குவைத்தில் இருந்து யூகோஸ்லாவியா பிரச்சினை வரை உங்கள் சிந்தனையில் பரிணாம வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று நாம் கருதுகிறோம். நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: நான் எப்போதும் யுத்தத்தில் எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளேன். நான் பேசுகின்ற வரையறைக்குள் ஒரு யுத்தம் நீதியானது, அது தற்பாதுகாப்பு நோக்கங்களை கொண்டிருக்கும் மட்டுமே ஏனென்றால் ஒவ்வொருவர்க்கும் தற்பாதுகாப்புக்கு உரிமை உண்டு. இங்கே பாருங்கள் வளைகுடா யுத்தத்தின் போது பிரச்சனை வேறுபட்ட தன்மையைக் கொண்டிருந்தது. எனது அபிப்பிராயத்தில் யுத்தத்தின் இரண்டாவது கட்டத்தில் அது தற்பாதுகாப்பில் இருந்து மாறி தண்டனை கொடுக்கும் யுத்தத்தின் நோக்கமாக மாறியது. மேலாக இப்பிராந்தியம் முழுக்க ஒரு பதட்ட நிலை நிலவியது. இந்த சிக்கலுக்கு மத ரீதியிலான வடிவம் கொடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பால்கன் பிரதேசத்தின் நிலைமை வேறுவிதமானது. பழைய யூகோஸ்லாவியாவில் கம்யூனிசத்தின் வீழ்ச்சியானது தீவிர தேசியவாதத்தின் மறுஎழுச்சியை எதிர்விளைவாகக் கொண்டுள்ளது. இது கணக்கில்லாத அப்பாவி மக்களை என்றும் கேட்டிராத வகையில் வன்முறைக்குத் தூண்டியது.

கேள்வி: 15 வருடங்களுக்கு முன்பு நீங்கள் போப்பாகப் பதவி ஏற்றதை விடவும் தற்போது உங்கள் மீது அதிகமான விமர்சனம் வைக்கப்படுகிறது. போலந்திலும் உங்கள் மீதான விமர்சனம் வைக்கப்படுகிறது. ஏன் போலந்தில் மட்டும் குறிப்பாக விமர்சனம்

வைக்கப்படுகிறது?

பதில்: உண்மை தான். போலந்தில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் ஒரு தர்க்க ஞானமற்ற நிலைப்பாட்டில் இருந்து என்னைப்பற்றிய எதிர்மறையான சித்தாந்தத்தை முன்வைக்கிறது. ஆனால் இந்தத் தந்திரோபாயம் பெருவாரியான கத்தோலிக்கர்களின் மனப்பூர்வமான உணர்ச்சிகளை பிரதிபலிக்கவில்லை. இவ்விமர்சன மையத்திற்கான காரணத்தை புரிந்து கொள்வதில் இருந்து இந்தப் பிரச்சனை வேறுபடுகிறது. ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்புக்குள் நுழைவது என்ற கருத்தாக்கம் தொடர்பான அணுகு முறையில் இருக்கின்றது. இயல்பாக போலந்து இவர்கள் சொல்கின்ற வகையில் ஐரோப்பாவில் நுழைவதை எதிர்க்கவில்லை. ஆனால் இம்முயற்சி ஒரு பொய்யான தெய்வீக வழிபாட்டு வடிவமாக ஆக்கப்படுவதை நான் எதிர்க்கிறேன். ஐரோப்பாவில் நுழையும் முயற்சியை மேற்கொண்டு, இவர்கள் அதிதீவிர தாராளவாதம், மதிப்பீடுகள் அற்ற நுகர்வமைப்பு போன்றவற்றை பிரச்சார பலத்தின் மூலம் திணிக்க நினைக்கின்றனர். உண்மையில் சொல்ல வேண்டும் என்றால் போலந்து ஐரோப்பாவில் நுழைய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அது ஏற்கனவே ஐரோப்பாவில் இருக்கின்றது. போலந்து தனது சொந்த மதிப்பீடுகளோடு ஐரோப்பாவில் ஒரு அங்கம் ஆக வேண்டும் என்பது முக்கியம். ஆனால் எந்தவிதமான விமர்சனமும் அற்று குருட்டுத்தனமான மேற்கின் பழக்கங்களை நாம் ஏற்கத் தேவையில்லை. அவற்றின் மீதான தீமைகளை விலக்கிக் கொள்ளாமல் நாம் மேற்கை ஏற்கத் தேவையில்லை.

கேள்வி: கம்யூனிசத்தின் வீழ்ச்சியில் உங்கள் பங்காக என்ன கருதுகிறீர்கள்?

பதில்: பலர், லச்வலேசா போன்றவர்கள் அதிதீவிரமானது, என்று கருதுகிறார்கள். ஏதேனும் தீர்மானகரமான பாத்திரத்தைக் கொண்டிருக்குமானால் அது கிறிஸ்தவ மதமாகத் தான் இருக்கும். அதன் நெறிமுறைகளோடு அதன் மத, அறிவியல் ரீதியான செய்திகளோடு மனிதத்துவம் மற்றும் உரிமைகளை காத்து நிற்கும் உள்ளார்ந்த தன்மையாகத் தான் இருக்கும்.

கேள்வி: கம்யூனிசம் ஏன் ஒரு வெற்றி பெற்ற சக்தியாக இருந்தது அதோடு இப்போதும் பல மேற்கு நாடுகளில் பலம் வாய்ந்த சக்தியாக இருக்கின்றதே? வேறு பல நாடுகளில் (லிதுவேனியா, போலந்து) மறுபடியும் இவை ஆட்சி அமைத்துள்ளது. இதை நீங்கள் எப்படிக் கருதுகிறீர்கள்?

பதில்: இந்த நூற்றாண்டில் நெறிமுறையற்ற காட்டுமிராண்டித்தனமான முதலாளித்துவ அமைப்பிற்கு எதிராகத் தான் கம்யூனிசம் தனது வெற்றிகளைச் சாதித்தது. போப் லியோ VIII அந்தக் காலகட்டத்தின் தொழிலாளர்களின் நிலைமையை விளக்கி இருந்த முதல் சமூக அறிக்கையை (REVUNM NOUARM) நாங்கள் இப்போது கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த சக்தி வாய்ந்த சுற்றறிக்கை 1991இல்

அன்புடையீர்,

யமுனா ராஜேந்திரனின் இல்மஸ் குணே பற்றிய இரண்டு கட்டுரைகளையும் வாசித்தேன். குணேயைப் பற்றிய அறிமுகமும் அவரின் மூன்று முக்கிய படங்களைப் பற்றிய விவரணமும் மிக சிறப்பாக இருந்தன. இரண்டாவது கட்டுரையின் கடைசியில் அவர் கூறியிருந்தவை அதே இதழின் ஆசிரியர் தலையங்கத்துக்கு முரண்பட்டிருந்தன போல எனக்குத் தோன்றியது.

கட்டுரையில் ராஜேந்திரன் "குணே, சினிமா பற்றி, அரசியல் பற்றி, கலைஞனுக்கும் சமூகத்துக்கும் இருக்கும் தொடர்பு பற்றி தெளிவான பதில்களை முன் வைத்தார்" என்று கூறி விட்டு அடுத்த பகுதியில் விமர்சனங்கள் பற்றியும் குணேவின் பதில்கள் பற்றியும் பேசுவோம் என்று கூறுகிறார். எனவே கட்டுரையின் அடுத்த பகுதியை வாசிக்கும் போது எங்களுக்கு குணேயைப் பற்றிய ஒரு உயர்ந்த அபிப்பிராயமே இருக்கும் இது அவரைப் பற்றிய சுயமான ஒரு புரிதலை ஏற்படுத்த தடையாக இருக்கும்.

இனி சஞ்சிகையின் பிரதான கட்டுரையான வ.ஐ.ச.ஜெயபாலனின் யாழ்ப்பாணத்தில் சாதியமைப்புப் பற்றி. கட்டுரையின் ஓட்டம் மிகத் தெளிவாகவும் சிறப்பாகவும் ஜெயபாலனால்

## வாசகர்

தாகம் ஆசிரியர்,

பத்திரிகை உலகின் கடந்த சகாப்த காலங்களை மீட்கின்ற போது எழுத்து, கருத்து உரிமைகள் என்கின்ற யதார்த்த பூர்வமான பண்புகள் பத்திரிகை வரலாற்றில் போலி ஜனநாயகத்தின் அடிமைத் தனத்திற்கும், விலங்கிடப்பட்ட நிலைமைகளிற்கும் உள்வாங்கப்பட்டு பொய்மைகளை பிரசவித்ததே இறந்த காலங்களாகி விட்ட பிரத்தியட்சங்கள் ஆகும். சில பத்திரிகைகள் யதார்த்த

ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. கட்டுரையின் பெரும்பாலான கருத்துகள் மற்றைய தகவல்கள் உடன்பாடுடையவை.

கட்டுரையின் ஒரு பகுதியில் ஜெயபாலன் எல்லோர்க்கும் குடியிருக்கும் நிலம் சொந்தமாகிற வகையில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு பொருத்தமான நிலச் சீர்திருத்த நடவடிக்கை அவசியப்படுகிறது என்கிறார். இன்னும் நிலப் பிரபுத்துவ பண்புகளி லிருந்து விடுபடாத எமது சமுதாயம் தனது அடுத்த கட்டமான முதலாளித் துவ அமைப்பை கட்டியமைப்பது தான் இந்த பிரச்சினைக்கு ஓரளவே னும் முடிவு காணும். அதாவது நிலத்துடனான தொடர்பிலிருந்து விடுதலையடைய வேண்டும் என்பது எனது கருத்து. அந்த நிலையில் தான் சாதியத்தின் அடித்தளமான மனித–நில உறவு உடைந்து போய் சாதிய அமைப்பு சிதைந்து போவது சாத்தியமாகக் கூடும். உண்மையில் இவை எல்லாம் நடப்பதற்கு இன்றைய தேசிய போராட்டம் வெற்றியடைந்தாக வேண்டும். ஏனென்றால் தமிழ் தேசியம் தனக்கென ஒரு சந்தையை உருவாக்காத வரை அதன் அடுத்த கட்ட நகர்வு என்பது கனவாகத் தான் இருக்கும். நன்றி.

ரதி, லண்டன்

# களத்தில்

பூர்வமான உண்மைகளை பிரசவித்தன. எனினும் அவை பிரசவித்த வேகத் திலேயே மரணித்து விட்ட வரலாறும் நாம் கண்டவையே. இந்நிலையில் எமது தேசத்தின் மீட்சிக்கான பங்களிப்பில் தாகம் தனது கடமையை செய்வது மூலம் வரலாற்றின் பக்கங் களில் என்றும் பதிந்திட தன் பாதச் சுவடுகளை பதித்து நிலைத்திட வேண்டும்.

இளங்கோ, லண்டன்

வெளியிடப்பட்டது. அது தொழிற்சங்க கூட்டுறவு அமைப்புகள் தொடர்பாகவும் உழைப்பாளியின் உரிமையாக நீதியான ஊதியம் போன்றவை பற்றி சட்டரீதியில் அங்கீகாரம் செய்தது. "மார்க்ஸ்" அவரும் தனது நோக்கில் இதை விளக்கி இருந்ததால் சமூக யதார்த்தம் இத்தகையது தான் என்பது சந்தேகமில்லை. அதிதீவிர தாராளவாத முதலாளித்துவத்தின் கோட்பாடுகளை கொண்டிருந்த அமைப்பின் தொடர்பாகத் தான் கம்யூனிசம் வெற்றி அடைந்தது. யதார்த்தம் பற்றிய இந்த எதிர்வினையை நாங்கள் முன்னிலைப்படுத்த வேண்டும். அந்த எதிர்வினை வளர்ந்து பல்வேறுபட்ட மக்களின் ஆதரவைப் பெற்றது. அது தொழிலாளர்கள் மத்தியில் மட்டுமல்ல புத்திஜீவிகள் மத்தியிலும் செல்வாக்கைப் பெற்றது. கம்யூனிசம் வாழ்வை மேம்படுத்தும் என்று அவர்கள் நம்பினார்கள். இந்த வகையில் போலந்தில் இருந்த பல அறிவுஜீவிகள் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து இருந்தார்கள். ஆனால் தாங்கள் கற்பனை செய்ததற்கு மேலாக யதார்த்தம் வித்தியாசம் என்பதை சீக்கிரம் உணர்ந்து கொண்டனர். அவர்களில் பலர் வீரம் மிகுந்தவர்கள். மிகுந்த சக்திவான்களும் கம்யூனிச அதிகார கட்டமைப்பில் இருந்து தூரப்படுத்திக் கொண்டு எதிரணிக்குச் சென்றனர்.

கேள்வி: சரி. பல நாடுகளில் கம்யூனிசம் மறுபடியும் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. இதை எவ்வாறு விளக்க முடியும்?

பதில்: இது கம்யூனிசம் மறுவகை சம்பந்தமான விசயமல்ல. இந்த எதிர்வினை புதிய அரசுகளின் கையாலாகாத் தனத்திற்கு எதிரான ஒரு விளைவு. இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. 50 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு அரசியல் வர்க்கம் கம்யூனிஸ்டுகள் தான். அவர்கள் தான் பிரதானமாக எவ்வாறு அரசியல் செயற்படும் எவ்வாறு பாராளுமன்றம் செயற்படும் என்பதை கற்றறிந்திருந்தனர். பிறர் இப்போது சொல்லப்படுகின்ற நடுநிலைவாதிகள், வலதுசாரிகள் ஆட்சி செய்வதற்கு தயார்ப்படுத்திக்கொள்ளவில்லை. ஏன் என்றால் அவர்களுக்கு முன்னால் எந்த வாய்ப்பும் இல்லை. அவர்கள் பலம் வாய்ந்தவர்களாகவும், எதிர் அணியில் ஒன்றிணைந்தவர்களாகவும் போலந்தில் சொலிடாரிட்டி (SOLIDARITY) காலத்திலும் ஒன்றிணைந்து இருந்தனர். தற்போது பிளவுண்டு இருக்கின்றனர். இதன் ஒரு அங்கமாக இது ஒரு வகைப் பழமை மீட்சி வெறியாகப் பூதாகரப்படுத்தப்பட்ட தனிநபர் அங்கத்துவவாதம் சமூக அரசியல் அரங்கில் சிதறுண்டு பிளவுண்டு போவதற்கு கொண்டு சென்றிருக்கின்றது. இது உள்ளார்ந்து பொய் கூறுவதற்கு கொண்டு சென்றிருக்கிறது. இது வெற்றிகரமான அரசை ஸ்தாபிக்க ஆக்கபூர்வமான பரிந்துரைக்கு கொண்டு செல்லவில்லை.

கேள்வி: நீங்கள் மிகவும் கடினமாகவும், ஆவேசத்துடனும் கம்யூனிசத்திற்கு எதிராக போராடினீர்கள். ஆனால் அதில் இருந்து விடுபட்ட நாடுகளில் தற்போது ஒழுக்க வீழ்ச்சி, போதை மருந்துப் பழக்கம் மற்றும் விபச்சாரம் மலிந்து பரவி இருக்கின்றது, பழைய

தமிழில்:
ரோஸா நிர்மலா

யூகோஸ்லாவியாவில் நாகரீகம் பற்றிய கருத்து இழிவுபடுத்தத் தக்க வகையில் ஒரு யுத்தம் நடந்து கொண்டு இருக்கின்றது. இவை அனைத்தும் கம்யூனிசத்தை தோற்கடிப்பதற்கான தகுதி வாய்ந்தவை தானா என்பதை நீங்கள் எப்போதாவது உங்களுக்குள் கேட்டுக் கொண்டதுண்டா?

பதில்: இந்தக் கேள்வியை இவ்வகையில் கேட்டது சரி என்பதை நான் நினைக்கவில்லை. கம்யூனிசம் அல்லது சோசலிசம் என்று வரையறுக்கப்படுகின்ற எதோர்ச்சதிகார மற்றும் அநீதியான அமைப்பிற்கு எதிராக போராடியது ஆதாரமான தார்மீகத் தன்மை வாய்ந்தது. அதே சமயத்தில் லியோ VIII சொன்னபடி சோசலிச திட்டம் உண்மையின் விதைகள் (SEED OF TRUTH) சில இருந்தது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த விதைகள் அழிக்கப்படக் கூடாது என்பது நிச்சயம். முதலாளித்துவத்தை அதிதீவிர தன்மையுடன் தூக்கிப் பிடிப்பது தவறு. கம்யூனிசம் சாதித்த சில நல்ல விசயங்களை மேம்போக்காகப் பார்க்க எத்தனிக்கின்றமை உதாரணம், வேலையில்லாத் திண்டாட்டம் தொடர்பாக கொம்யூனிஸ்டுகள் மேற்கொண்ட முயற்சிகள், ஏழைகள் தொடர்பாக கொம்யூனிஸ்டுகளின் அக்கறைகளில், சோசலிசத்தின் நடைமுறையில் அரசின் அபரிதமான பாதுகாப்பு நோக்கம் வெளிப்படுத்தப்பட்டது. சில எதிர்மாறான விளைவுகளும் இருந்தன. தன்வினை முனைப்பு (PRIVATE INITIATIVE) அழிந்து போனது செயலின்மையும், மந்தநிலைமையும் பரவியதே. இப்போது மாறிய சூழலில் மக்கள் அந்த அனுபவம் இல்லாமல் தாங்களாகவே செய்து கொள்ளும் தகுதியும் இல்லாமல் தனிநபர் பொறுப்பு என்ற பழக்கம் அற்றுப் போனார்கள். அதே கால கட்டத்தில் வியாபாரம் செய்கின்ற தனிநபர்கள் பொருளாதார ரீதியிலான முனைப்புகளோடு செயற்படுகிறார்கள். இவர்கள் இந்தக் காலத்தை தங்களைக் கொழுக்க வைக்க பயன்படுத்திக் கொள்வார்கள். இதனால் எப்போதும் நேர்மையற்ற ஒழுக்க மீறலான வழிகளைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் பெரும்பாலானவர்கள் நான் மேற்குறிப்பிட்ட காரணங்களால் பழைய கம்யூனிச அமைப்பை சார்ந்தவர்களாக இருக்கின்றனர். இதில் இருந்து நீங்கள் ஒன்றைப் பார்க்க முடியும். ஒரு அமைப்பிலிருந்து இன்னொரு அமைப்பிற்கு மாறுவது என்பது மிக்க கடினமானது. அதற்குக் கொடுக்க வேண்டிய விலை மிக அதிகமானது. வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரிப்பு, வறுமை, மற்றும் மனித துயரங்கள் போன்றவை தான் அவை.

கேள்வி: உங்கள் சமீபத்திய பால்டிக் நாடுகள் விஜயத்தில் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்: மார்க்ஸியம்/சோசலிசத்தில் 'உண்மையின் மையம்' இருப்பதாகப் பேசியிருக்கிறீர்கள். உங்கள் அபிப்பிராயம் பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறது!

பதில்: இதில் புதுமை ஏதுமில்லை. இது தேவாலயத்தின் சித்தாந்தத்தில் எப்போதுமே ஒரு அம்சமாக குறிக்கப்பட்டிருக்கிறது.

லியோ VIII இதைச்சொல்லியிருக்கிறார். நான் மறுபடி அதை உறுதிப்படுத்துகிறேன். மேலாக, இம்மாதிரிதான் சாதாரண மக்களும் நினைக்கிறார்கள். கம்யூனிஸத்தில் சமூகம் பற்றின அக்கறை எப்போதுமே மையமானது மாறாக முதலாளித்துவத்தில் தனிமனிதமூப்பே (INDIVIDUALITY) முக்கியமானது.

சோசலிசம் நிலவிய நாடுகளின் சமூகம் பற்றின இந்த அதீத அக்கறை, குடிமக்களின் வாழ்நிலையின் பல்வேறுபட்ட அக்கறைகளை கீழ்நிலைக்குத் தள்ளியிருக்கிறது.

கேள்வி: நீங்கள் இவ்வாறு பேசுவதைப் பார்த்தால், முதலாளித்துவத்தைப் பலமாக நீங்கள் எதிர்க்கிற அளவு சோசலிசத்தை – கம்யூனிஸத்தை எதிர்க்கவில்லை என்று தோன்றுகிறது. இம்மாதிரி ஒரு அபிப்பிராயத்தைத்தான் நீங்கள் தர விரும்புகிறீர்களா?

பதில்: நாங்கள் சாட்சியமாயிருந்த பிரச்சினையின் தோற்றத்துக்கு திரும்பிப் போக வேண்டும். ஐரோப்பாவிலும் உலகத்திலும் இன்று நிலவும் தீவிரமான சமுதாய மானுடக்குல பிரச்சினைகளுக்கு முதலாளித்துவத்தின் திரிவுபட்ட வெளிப்பாடுகள்தான் வேர்கள் என்று நான் கருதுகிறேன்.

லியோ VIII இன் காலத்தில் நிலவிய முதலாளித்துவம் போன்றதல்ல இன்றைய முதலாளித்துவம் என்பது சரியாக இருக்கலாம். இது மாறியிருக்கிறது. சோசலிசச் சிந்தனையின் பாதிப்பினால் நல்ல நோக்கங்களைக் கொண்டிருக்கிறது. இன்றைய முதலாளித்துவம் மாறியிருக்கிறது, வித்தியாசப்பட்டிருக்கிறது. சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னல்களை அறிமுகப்படுத்தி இருக்கிறது, அதற்காக தொழிற்சங்க இயக்கங்களுக்கு நாம் நன்றி சொல்லவேண்டும். அரசும் கட்டமைப்புகளும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் சமூகக் கொள்கைகள் நடைமுறைக்கு வந்திருக்கிறது. உலகின் பல நாடுகளில், இன்னும், காட்டுமிராண்டித்தனமான அரசுகள் இருக்கின்றன. சென்ற நூற்றாண்டில் இருந்த மாதிரியே இருக்கின்றன.

கேள்வி: போலந்துக்காரராயிருப்பது எந்த அளவில் போப்பாயிருப்பதில் உங்களைப் பாதித்திருக்கிறது?

பதில்: நான் அங்கு வளர்ந்தேன். ஆகவே அந்த வரலாற்றை, கலாசாரத்தை, அனுபவத்தை, போலிஷ் மொழியை என்னுடன் கொண்டு வந்திருக்கிறேன். இப்போதும் கூட நான் ஏதேனும் எழுத வேண்டுமென்றால் அதை போலிஷ் மொழியில்தான் எழுதுகிறேன்.

சுதந்திரத்திற்காகப் போராட வேண்டிய ஒரு நாட்டிலிருந்து நான் வந்ததால், அடக்குமுறை மத்தியிலிருந்து வந்ததால், அண்டை நாடுகளின் ஆதிக்கசூழலில் இருந்து வந்ததால், மூன்றாம் உலக நாட்டு மக்களின் பிரச்சினைகளை, அவர்கள் போராட்டங்களை அனுதாபத்துடன் நோக்கும் நிலைக்கு நான் வந்தேன்.

வேறுவகையிலான சீர்த்திருத்தங்களை கொண்ட நாடுகள் மூன்றாம் உலக நாடுகள், குறிப்பாக பொருளாதாரச் சார்ந்திருந்தலில் அகப்பட்ட நாடுகள். சுரண்டல் என்றால் என்னவென்பதை நான் அறிவேன்.

## போப்பாண்டவருடன் ஒரு பேட்டி

மூலம்: ஜோஸ் கவ்ரோன்ஸ்கி

எந்தவிதமான தள்ளாட்டமும் இல்லாமல் நான் ஏழைமக்களின் பக்கம் நிற்கிறேன். இல்லாமையில் இருப்பவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், சுரண்டப்படுபவர்கள், பாதுகாப்பில்லாதவர்கள் – ஆம் இவர்கள் பக்கம் நான் நிற்கிறேன்.

அதிகாரம் வாய்ந்தவர்கள் இந்த வகையிலான போப்புக்கு சாதகமாக எப்போதும் இருக்க மாட்டார்கள். அவரது அறவியல் கோட்பாட்டைக் கேவலப்படுத்தவும் செய்வார்கள். உதாரணமாக அவர்கள் கேட்கிறார்கள்: கர்ப்பத்தடை, கருக்கலைப்பு, விவாகரத்து போன்றவற்றிற்கு லைசென்ஸ் கேட்கிறார்கள். இவைகளை போப்பால் கொடுக்க இயலாது. கடவுளிலிருந்து அவருக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு மனித ஜீவனைப் பாதுகாப்பது, அவன் மகத்துவத்தைப் பாதுகாப்பது, அவன் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது, எல்லாவற்றிலும் முதன்மையாக வாழ்வதற்கான உரிமைகளைப் பாதுகாப்பது.

கேள்வி: நீங்கள் அடிக்கடி சொல்கிற மாபெரும் ஐரோப்பாவுக்கு எந்த வகையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பங்களிப்புச் செய்ய முடியும் என்று கருதுகிறீர்கள்.

பதில்: முதலாவதாக இந்த நாடுகளின் அடையாளத்தை பங்களிப்புச் செய்ய வேண்டும். இவைகள் ஐரோப்பிய நாடுகள் கம்யூனிஸ ஆட்சியமைப்புகள் சுமத்திய மாற்றங்கள் எல்லாவற்றையும் மீறி இவைகள் தங்கள் அடையாளத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்திருக்கிறது.

அவர்கள் போற்றிப்பாதுகாத்த அவர்களுடைய உள்ளுணர்வை மீட்டெடுக்க வேண்டும்.

இறுதியில், ஒன்று தெளிவாயிருக்கிறது. வர்க்கம் பற்றிய இந்தத் தத்துவம், வர்க்கப்போராட்டம், வர்க்க சர்வாதிகாரம் போன்றவை தேசீய பிரக்ஞையை வெற்றிகொள்ள முடியவில்லை.

மனிதன் மத உணர்வையோ, மனிதனின் மதம்சார்ந்த பரிணாமத்தையோ வெற்றிகொள்ள முடியவில்லை இன்னும். தேசீய அடையாளம் பற்றி உணர்தல், மத அடையாளம் பற்றிய உணர்தல், உள்ளார்ந்து வாழ்கிறது. அதிகஅளவில் இன்னும் பலப்பட்டிருக்கிறது நான் முன்பே சொன்னபடி.

கேள்வி: ஒரு பக்கத்தில் வளர்ச்சியடைந்த் மேற்குநாடுகள். நீங்கள் புரிந்திருக்கும்படி அதிகஅளவு பொருளாதாரப்பிரச்சினைகளில் இது குவிமையம் கொண்டிருக்கிறது. இன்னொருபக்கம் பழைய கம்யூனிஸ ஐரோப்பிய நாடுகள்,– அவைகள் துன்பம் நாம் அறிந்தவைதான் – வாழ்வின் மேம்பாடுடைதலில் இன்னும் கீழ்நிலையில் இருக்கிறது. இந்த விலகிய இரண்டு ஐரோப்பாவில் எவை அதிக பலனை அடையப் போகிறது?

பதில்: நாங்கள் கவனிக்க வேண்டியது, எவை இழப்பதற்கு அதிகமாகக் கொண்டிருக்கிறது என்பதைத்தான். எனக்கு எந்த விதமான சந்தேகமுமில்லை, பிரச்சினைகளுமில்லை, தனித்தன்மை, அடையாளம் என்கிற அளவில் கிழக்கு ஐரோப்பாதான் அதிகமாக

## 15 ஆண்டுகளில்

போப்பாண்டவர் இரண்டாவது ஜோன் போல் போலந்துக் காரர். கரோல் வொட்ஜ்லா இவரது இயற்பெயர். 1978இல் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் பொறுப்பை ஏற்றார். 420 ஆண்டுகளில் இத்தாலியரல்லாத ஒருவர் திருச்சபையின் பொறுப்பு வகுப்பது இதுதான் முதன் முறை. 1981இல் இவரைக் கொலை செய்யும் முயற்சியொன்றிலிருந்து தப்பினார். மிக நீண்ட ஆண்டுகள் (15 வருடங்கள்) பதவியிலிருக்கும் மதத்தலைவர் இவர்தான். போலந்தில் வாடோவைஸ் எனும் இடத்தில் 1920இல் பிறந்தார்.

இப் பேட்டி Lastampa எனும் பத்திரிக்கைக்காக ஜோஸ் கவ்ரோன்ஸ்கி என்பவரால் எடுக்கப் பட்டது. இதன் ஆங்கில மொழியாக்கம் லண்டன் கார்டியன் பத்திரிக்கையில் 93, நவம்பர் 2 இதழில் வெளியானது.

இழக்க வேண்டியிருக்கும். எதேச்சாதிகார அமைப்பு மற்றும் அது சுமத்திய அத்துணை அனுபவங்களோடும் கிழக்கு ஐரோப்பா முதிர்ச்சி பெற்றிருக்கிறது...

கேள்வி: காம்யூனிஸத்துக்கு வாழ்த்து என்று சொல்லுங்கள்!

பதில்: இல்லை. மாறாக, கிழக்கு ஐரோப்பிய நாடுகள். தற்பாதுகாப்பு இயக்கப் போக்கிலும், மார்க்ஸிஸ்ட் எதேச்சாதிகாரத்திற்கு (MARXIST TOTALITARIANISM) எதிரான போராட்டத்திலும் முதிர்ச்சி பெற்றிருக்கிறது. கிழக்கில் வித்தியாசமான பரிணாமத்தில் மானுட ஆன்மபலம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி: போலந்துக்காரர்களுக்கு நீங்கள் ஒருமுறை சொல்லியிருக்கிறீர்கள்: "இன்னும் முயற்சிக்கப்படாத பாதையை நீங்கள் தேடுங்கள்". இது சோசலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலான மூன்றாவது பாதை நோக்கிய ஒரு அறைகூவலா?

பதில்: மூன்றாவது பாதை பற்றின கருத்து ஒரு கற்பனவுலகம் என்று நான் அஞ்சுகிறேன். ஒரு பக்கம் காம்யூனிஸ கற்பனாவுலகம். நடைமுறைபடுத்தப்பட்டு துயரமான வகையில் திடீர்புயலில் மறைந்து போனது. இன்னொரு பக்கத்தில், முதலாளித்துவம் அதன் நடைமுறையிலும், அதன் அடிப்படை நெறிகள் எனும் அளவிலும் தேவாலயத்தின் கோட்பாடுகளுக்கு ஒப்புக்கொள்ளத் தக்கதாயிருக்கிறது.

துரதிஷ்டவசமாக, ஒப்புக்கொள்ளப்பட்ட நடைமுறைமீது அவதூறுகள் இருக்கின்றன - பல்வேறு விதமான அநீதிகள், சுரண்டல், வன்முறை, அகங்காரம் - சிலர் இந்த நடைமுறைகள் ஒப்புக்கொள்ளத் தக்கதாகவும், இவைகள் அதன் உள்ளார்ந்தது என்றும் ஏற்றுக்கொள்கிறார்கள். நாங்கள் காட்டுமிராண்டித்தனமான முதலாளித்துவத்திற்கு இப்போது வந்து சேர்ந்துள்ளோம். இந்த அவதூறான முதலாளித்துவ நடைமுறையைத்தான் நாம் கண்டனம் செய்கிறோம்.

கேள்வி: போல் VI தன்னுடைய பிரசுரிக்கப்படாத டையரிக் குறிப்புக்களில் "தலைமைக் குருவின்/போப்பின் அதீதமான தனிமை" பற்றிக் குறிப்பிடுகிறார். மிக முக்கியமான விசயங்களில் கூட தனியொருவராக இருந்து முடிவு எடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாவதைக் குறிப்பிடுகிறார். நீங்கள் எப்போதேனும் அவ்வாறான தனிமையை உணர்ந்திருக்கிறீர்களா?

பதில்: நான் உண்மையில் அப்படியில்லை. எப்போதும் என்னருகில் நான் பிறரைக் கொண்டிருக்கிறேன். அவர்கள் எனக்கு நெருங்கியவர்கள், என் நண்பர்கள். முடிவுகளை நான் தனியாக எடுப்பதேயில்லை. திருச்சபை மற்றும் ஆட்சிமன்றத்தோடு சேர்ந்து நான் செயல்படுகிறேன்.

கேள்வி: புனிதத் தந்தையே, நீங்கள் டைரி எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறீர்களா?

பதில்: இல்லை. எனக்கு சிந்திக்க பல விசயங்களும் செய்வதற்கு வேறு நிறைய காரியங்களும் இருக்கிறது. □

## அவரது இண்டாவது பேட்டி இது

கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் அரசுகளின் வீழ்ச்சி, மேற்குலக முதலாளித்துவத்தின் நெருக்கடியெனும் இடைப்பட்ட காலகட்டத்தில் இப்பேட்டி முக்கியத்துவம் உடையது.

நிலவும் சமுதாயம் சோஸலிசத்தின் ஆக்கவேர்களை எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிறார்.

முதலாளித்துவம் பற்றி காட்டமான விமர்சனத்தையும் நம்பிக்கையின்மையையும் வெளியிடுகிறார்.

இவர் தொடங்கி வைக்கும் விவாதம் முற்றுப்பெற்றதல்ல. புதிய உலகம் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்புபவை.

மார்க்ஸிஸ்டுகளுக்கிடையிலும் மதம் பற்றியும், நடைமுறை சார்ந்த சோஸலிச நம்பிக்கைகள் பற்றியும் ஆழ்ந்த விமர்சன நோக்கங்களை எழுப்புபவை.

"மழ இனிமே வராது... வானம் வெளுத்திருச்சு..."
"ஆமா..! மப்பும் மந்தாரமும் கலைஞ்சிருச்சு..."
"பரியாரிய குழிமேட்டுக்கு வரச் சொல்லுங்க!"
"ஆமா... அட்டமி சரியா அஞ்சு முப்பதுக்கு தொடங்குது... அதுக்குள்ள அடக்கஞ் செஞ்சிறணும்... சனங்களும் நேரகாலத்தோட திரும்பனுமில்ல..."

அங்கே நின்ற ஒரு வாலிபன் இடைமறித்தான். "அட்டமியோ... நவமியோ அந்த இருவதுபேரும் வராம அடக்கம் செய்யமுடியாது! வுடவும் மாட்டோம்!" அந்த வார்த்தையில் பிடிவாதமும் கடுமையும் இருந்தது. "யாரும் அவசரப்படாதீங்க... அந்த இருவது பேரும் வந்துக்கிட்டு இருக்கிறதா சேதி வந்திருச்சு..." ஒருவர் சொன்னார். எல்லோரும் நிம்மதியடைந்தார்கள்.

"இப்படியொரு கூட்டம் எந்த சாவுக்குமே வந்ததில்ல... மந்திரி சாவுக்கோ... அரசியல்வாதி சாவுக்கோ... ஈஹாம்..." என்று ஒருவர் வாயூறிப் போனார். ஆமாம், மக்கள் யாவரும் காகங்களைப் போன்றவர்கள். காகங்கள் சாவிலே மட்டும் ஒற்றுமைப்படும் – சாவிலே மட்டும் கூடிப்பறக்கும். செத்துக்கிடக்கும் பறவையை வட்டமிடும். மனிதர்களும் இப்படித்தான்.

ஆனந்தனின் மரணம் மக்களைக் கூட்டி வைத்திருக்கிறது. அந்த மக்களை வழிநடத்தும் தொழிற்சங்கத்தலைவர்களை அழைத்து வந்திருக்கிறது. காலங்காலமாக அந்த மக்கள் தூக்கிச்சுமந்த சங்கக் கொடிகளெல்லாம் அந்த மலைமேட்டில் வீசும் காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன. சாவில் கலந்து கொள்ள வந்த மக்கள் அந்த தேயிலை மலைகளையெல்லாம் மனித மலைகளாக மாற்றியிருந்தார்கள்.

ஒரு தலைவர் பேசத் தொடங்கினார். சுடுகாட்டிலே ஒலிபெருக்கி பூட்டியிருந்தார்கள். அவர் கணைத்து இருமி, சட்டையை இழுத்து சரிசெய்து கொண்டு ஒலிபெருக்கியைப் பிடிக்குமுன்னே ஒரு பெரிய பொலிஸ் ஜீப்வண்டி ஓடி வந்தது. சனங்கள் சலசலப்படைந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இருபது இளைஞர்களும் ஜீப் வண்டியிலிருந்து இறங்கினார்கள். ஒருவரது கை இன்னொருவருடைய கையோடு இணைத்து இரும்பு காப்பு...... 'கைமாசு' போடப்பட்டிருந்தது. விளையாட்டுப் போட்டியில் கயிறு இழுப்பவர்களைப் போன்று அவர்கள் நின்றார்கள். அவர்களைக் கண்டதும் இளைஞர்கள் ஓடிவந்தார்கள். பொலீஸ் வண்டியை சூழ்ந்து கொண்டார்கள். அங்கு கூடி நின்ற தொழிற்சங்கத் தலைவர்கள் அத்தனைபேரும் இளைஞர்களைச் சாந்தப்படுத்தினார்கள். அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடக்கூடாதென்று அக்கறைப் பட்டார்கள். தலைவர்களில் ஒருவர் பொலீஸ் அதிகாரியுடன் கதைத்தார். பொலீஸ் அதிகாரி சங்கிலிக் காப்புகள் பூட்டப்பட்டிருந்த இளைஞர்களின் கைகளை அவிழ்த்து விட்டார்.

இரும்புக்காப்பு அவிழ்க்கப்பட்ட இளைஞர்கள் ஓடிப்போய் ஆனந்தனின் பிணத்தைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டார்கள். அவனது பாதங்களை தங்கள் கண்களோடு ஒத்திக் கொண்டார்கள். அவர்கள் கூக்குரல் இட்டு அழுத காட்சி உருக்கமாகவிருந்தது. கொலை ஆயுதங்களைச் சுமந்துவந்திருந்த காக்கிச்சட்டைக்காரர்கள் தொப்பிகளைக் கழற்றி கையிடுக்கில் வைத்துக் கொண்டார்கள். மனித உணர்வுகள் அந்த மனிதக் கொலையில் சுடுகாட்டை மௌனமாக்கி கொண்டிருந்தன.




தொழிற்சங்கங்களின் சார்பாக ஒவ்வொரு தலைவரும் பேசத் தொடங்கினார்கள். "இப்படியொரு சம்பவம் இனிமேலும் நடக்கவிட மாட்டோம்" என்றார் ஒரு தலைவர். "தொழிலாளர்களைப்

பாதுகாப்போம்!" என்றார் இன்னொரு தலைவர். "நாட்டுல போடுற திட்டங்களுக்கு நாம ஒத்துழைப்பு குடுக்கத்தான் வேணும்!" என்றார் இன்னுமொரு தலைவர். இவ்வாறு அங்கே பறக்கும் பல வண்ணக் கொடிகளைப்போல பல்வேறுபட்ட பேச்சுக்கள் பேசி முடிந்தன. ஆனந்தனின் உடலில் தொழிற்சங்கக்கொடிகள் போர்த்தப்பட்டு, சகல மரியாதைகளுடன் அடக்கம் செய்தார்கள். கூடி



நிறைந்திருந்த மக்கள் கூட்டம் தங்களது இனத்துக்காக உயிர்நீத்த அந்த வாலிபனுக்கு இறுதிமரியாதை செலுத்திவிட்டு மௌனமாகத் திரும்பினார்கள். ஜீப்பிலே வந்திருந்த வாலிபர்களுக்கு மீண்டும் இரும்புக்காப்புகள் பூட்டப்பட்டன. அவர்கள் ஜீப்பிலே ஏற்றப்பட்டார்கள்.

சுடுகாட்டிலே நின்றிருந்த இளைஞர்கள் துடித்தார்கள் – கொதித்தார்கள் – குமுறினார்கள். அவர்களைத் தொழிற்சங்கத் தலைவர்கள் சாந்தப்படுத்தினார்கள். ஜீப்வண்டி பறந்தது. சிறிது நேரத்தில் சங்கத்தலைவர்களும் தங்கள் வாகனங்களில் ஏறினார்கள்.

குழிமேட்டில் பத்திக்கட்டுகள் புகைந்து கொண்டிருந்தன....

அந்தத் தோட்டத்து தொழிலாளர்கள் மாத்திரம் மிஞ்சியிருந்தார்கள். அவர்கள் ஆனந்தனின் குழிமேட்டைப் பிரிய முடியாமல் பிரிந்தார்கள். அவனது சாவு எப்படி நடந்தது என்று மீண்டும் மீண்டும் அவர்கள் நினைத்துப்பார்த்தார்கள்...

* * *

மேகமலை தோட்டத்து முன்னூற்று ஐம்பது ஏக்கர் நிலத்தை அப்படியே கிராமவாசிகளின் குடியேற்றங்களுக்காக அரசு சுவீகரிக்கப் போகிறது என்ற ஓர் அறிக்கையை தோட்ட நிர்வாகி தோட்டத் தலைவர்மார்களின் முன்னிலையில் வாசித்துக் காட்டினார். அந்த தோட்டத்து மக்களை வெவ்வேறு தோட்டங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், அடுத்த கிழமை அந்த தோட்டங்களின் விபரங்கள் வரவிருப்பதாகவும் கூறினார். இதைக்கேட்ட தலைவர்மார்கள் அதிர்ச்சியடைந்தார்கள். தோட்ட நிர்வாகி இன்னும் தொடர்ந்தார். பிரயாணங்களைப்பற்றி தொழிலாளர்கள் பயப்படத் தேவையில்லையென்று தோட்டக்கணக்கில் லொறிகள் வழங்கப்படுமென்றும் தைரியப்படுத்தினார்.

"இது நடக்கப்போற காரியமில்லே!... நாங்க பாத்துக்கிறோம்!" என்று வெறிகொண்ட வேங்கைகளாக தலைவர்மார்கள் நான்கு பேரும் வீட்டுக்குத் திரும்பினார்கள். மாரியம்மன் கோவிலில் திடீர் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். பீதியடைந்த தொழிலாளர்கள் ஆண்களும் பெண்களுமாக கோவிலில் வந்து குவிந்தார்கள். வயது சென்று பென்சன் வாங்கிய தொழிலாளர்கள் கூட மண்ணெண்ணெய் பந்தங்களைப் பிடித்துக்கொண்டு தட்டுத்தடுமாறி கோவிலுக்கு வந்து சேர்ந்தார்கள். வேலையின்றி வீடுகளிலிருக்கும் வயது வந்த ஆண்களும் பெண்களும் இந்தக் கூட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து கலந்து கொண்டார்கள்.

இரவு ஏழுமணி, கூட்டம் ஆரம்பமாகியது. "நம்ம தோட்டத்த கிராமத்தானுங்களுக்குப் பிரிச்சுக் குடுக்கப் போறாங்க. முன்னூத்தியம்பது ஏக்கரையும் குடியேற்றத்திட்டத்துக்கு எடுத்திட்டாங்களாம்... நம்ம எல்லாத்தையும் வேற தோட்டங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செஞ்சாச்சாம்... இந்த திட்டத்த எதிர்க்கணும்! காணி அளக்க வர்றவங்கள தோட்டத்துக்குள்ள வுடக்கூடாது! கட்சி பாகுபாடு இல்லாம எல்லாரும் அகிம்சா போராட்டம் நடத்தணும்!" என்று தோட்டக்கமிட்டித் தலைவர் பேசினார்.

இவர் பேச்சைக் கேட்ட தொழிலாளர்கள் ஆக்ரோஷம் அடைந்தார்கள். "தோட்டத்த விட்டுக்குடுக்க

மாட்டோம்... உயிரே போனாலும் போராட்டஞ் செஞ்சி இந்த திட்டத்த எதிர்ப்போம்!" என்று கோசமிட்டார்கள்.

"குடியேத்தம் செய்யணுமுன்னா... தரிசு நெலங்கள தேடிப்பாத்து குடியேத்தணும்... அது இல்லாமே குடியிருக்கிற சனங்கள வெரட்டிப்புட்டு மத்தவங்கள குடியேத்துறது அநீதியான காரியம்!" என்று ஒரு வாலிபன் கூட்டத்திலிருந்து குரல் கொடுத்தான்.

தேயிலை றப்பர் தோட்டங்களை உண்டாக்குவதற்கு வந்த காலம் முதல் இன்றுவரை நாடோடிகளைப் போலவே தோட்டம்விட்டு தோட்டம் கலைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த மக்கள் கூட்டம் சிந்தை கலங்கிப் போயிருந்தது. "நாங்க நெரந்தரமா ஒரு தோட்டத்துல குடியிருக்க முடியல்ல... எந்தநேரம்... எந்த லயத்துக்கு - எந்த டிவிசனுக்கு - எந்த தோட்டத்துக்கு அனுப்பப்படுவோமுன்னு நிச்சய மில்லாத வாழ்க்க.. இந்த நெலமையை மாத்தியே ஆகணும்!" என்று இன்னுமொரு வாலிபன் குறிப்பிட்டான்.

மனத்தின் அடித்தளத்தில் தேங்கிக்கிடந்த வேதனைகள்.. விரக்தியடைந்த உணர்வுகள் யாவும் அந்தக் கூட்டத்தில் வெளித்தோன்றின.

* * *

"காணி அளப்பதுக்கு நாளைக்கு டிப்பார்ட் மெண்டிலிருந்து வர்றானுங்களாம்...! அளக்க வுட்டுப்புடாதீங்க தலவரே!" என்று தோட்டத்து பெரிய கிளாக்கர் ராஜு தலைவரை இரவு ஒன்பது மணிக்குமேல் வீட்டுக்கு வரச்சொல்லி ரகசியமாகக் கூறினார். சமூகத்திலிருந்து ஒதுங்கி பதுங்கி வாழும் தோட்ட ஊழியர்கள்... காலம் முழுவதும் தொழிலாளர்களின் கழுத்தை அறுத்துக் கொண்டிருந்தாலும் இந்தமாதிரி ஆபத்துக் காலங்களில் தொழிலாளர்களின் நிழல்களில் அண்டிக்கொள்ள வருவார்கள். "நீங்க சொல்றதுக்கு முன்னே ரெடியா கிட்டோம்! தோட்டத்துக்குள்ள எந்தப் பயல்களையும் வுடமாட்டோம்... நாங்க இந்த தோட்டத்தவுட்டுப் போகவும் மாட்டோம்!" என்றார் ராஜு தலைவர்.

தொழிலாளர்களின் கொந்தளிப்பான மன உளைச்சல்களோடு பொழுது விடிந்தது.

தோட்டத்து முகப்புப்பாதையில் போருக்குப் போகும் படையைப்போல தொழிலாளர்கூட்டம் கூடி நின்றது. பலத்தக்காற்று... உயர்ந்த மரங்கள் வில்லாய் வளைந்து தலைவிரித்தாடின. தூரலும் ஆரம்பித்தது.

இதுவரையிலும் காணி அளப்பவர்கள் வரவில்லை. "இனிமே எங்க வறப்போறானுங்க..." என்று அசந்த போதுதான்... திடுதிப்பென உறுமிக்கொண்டு ஐந்து ஆறு ஜீப்வண்டிகள் ஓடிவந்தன. ஆண்களும் பெண்களும் பிள்ளைகளுமாய் பாதையை மறித்து நின்றார்கள். ஜீப்வண்டிகள் நிலைக்குத்தி நின்றன. காணி அளக்கும் அதிகாரிகள் இறங்குவதற்கு முன்னரே காக்கிச் சட்டைக்காரர்கள் இறங்கினார்கள். ஆயுதங்களை நீட்டிக்கொண்டு 'பாதையை விடுங்கள், காணி அளப்பவர்களுக்கு இடைஞ்சலாக இருக்காதீர்கள்" என்று அதட்டினார்கள். தொழிலாளர்கள் விடாப்பிடியாக நின்றார்கள்.

ஒரு பொலிஸ் அதிகாரி தாழ்மையாக கதைக்கத்

## கலை ஒளி முத்தையாபிள்ளை

மு சிவலிங்கம் மலையகக் கலை இலக்கியத் துறையில் பிரபல்யமானவர். அறுபத்திரண்டுகளில் எழுதத் தொடங்கிய இவர் இருபத்தைந்து சிறுகதைகளுக்கு மேல் எழுதியுள்ளார். இவர் பல நாடகங்களையும் எழுதி மேடையேற்றியுள்ளார்.

மலையக இலக்கியத் துறையில் தனக்கென ஒரு தனிப்பாணியை அமைத்துக் கொண்டு எழுதுபவர்களில் இவரும் ஒருவராவார். நகைச்சுவை ஆக்கங்களும் நிறைய படைத்துள்ளார். இவரது நடைச்சித்திரங்கள் இலங்கைத் தமிழத் தினசரிகளில் பிரசுரிக்கப்பட்டு வந்துள்ளன.

சிறப்பான பல கவிதைகளை தமிழில் படைத்துள்ளார். இவரது ஆங்கிலக் கவிஞர் ருட்யார்ட் கிப்ளிங்கின் கவிதையின் தமிழாக்கம் மலையக கவிதை இலக்கியத்தில் குறிப்பிடக் கூடிய ஒன்று. வீரகேசரி நடாத்திய மலையக சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற இவரது 'இதுவும் ஒரு கதை', 'கதைக் கனிகள்' என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

வீரகேசரி பத்திரிகை ஸ்தாபனத்தில் பத்திரிகையாளராகத் தொழிலை ஆரம்பித்த இவர் சிறந்த கேலிச் சித்திரக்காரராகவும் விளங்கினார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தொழிற் சங்கத்தின் 'ஜனநாயக தொழிலாளி' பத்திரிகையின் ஆசிரியராகவும் மலையக இளைஞர் முன்னணியின் 'முன்னணி' பத்திரிகையின் ஆசிரியராகவும் பணி புரிந்தார்.

பிரபல மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் 'புதிய காற்று' திரைக் கதையை படமாக்குவதில் தயாரிப்பாளர் விபி கணேசனுக்கு துணை புரிந்து அப்படத்தில் முக்கிய பாகம் ஏற்று நடித்துள்ளார்.

ஆசிரியராகவும் கடமையாற்றிய இவர் தற்போது அரசாங்கப் பெருந்தோட்டத்தில் கணக்காளராக வேலை செய்கின்றார். திருமணமான இவருக்கு மூன்று மகன்மார் உள்ளனர்.

தொடங்கினார். "காணி அளப்பதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் கிடையாது. சட்டத்தை நிறைவேற்ற நாங்கள் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்" என்றார். காணி அளக்க வந்தவர்களும் அவ்வாறே கூறினார்கள். "நாங்கள் சம்பள ஊழியர்கள் எங்கள் கடமையைச் செய்ய உதவுங்கள்" என்று பணிவோடு கேட்டார்கள். தொழிலாளர்கள் அவர்களைத் திரும்பிபோகும்படி பணிவாகக் கேட்டார்கள்.

வந்த கோஷ்டிகள் தேயிலை மலைக்குள் இறங்கி தோட்டத்துக்குள் நுழைய முயற்சித்தார்கள். தொழிலாளர்கள் அவர்களை மறித்தார்கள். இரண்டு பகுதியினரும் முட்டி மோதிக் கொண்டார்கள். ஒரே ரகளை... அடிதடி... இவர்கள் கற்களை எறிந்தார்கள்.. அவர்கள் வானத்தை நோக்கிச் சுட்டார்கள். வாகனங்கள் உருட்டப்பட்டன. துப்பாக்கிச் சோங்கால் தொழிலாளருக்கு அடி.. துப்பாக்கியை ஒருவன் தாவிப்பிடிக்க இன்னொரு காக்கிச்சட்டை குறி வைச்சு... ஓர் உயிர் அந்தப் போராட்டத்தின் நெற்றியில் பொட்டு வைத்தது.... ஆனந்தன் என்ற தொழிலாள இளைஞன் துடிதுடித்து ஓய்ந்தான். தொழிலாளர்கள் மலைக்காற்றாக மாறினார்கள். ஓய்ந்து தொடர்ந்தும் கதைத்தான். "எங்கள் போராட்டத்தையும் மரணத்தையும் வேடிக்கை பார்க்க வந்தவர்கள் அஞ்சலியும் அனுதாபமும் தெரிவித்தார்களே தவிர ஆதரவு காட்ட முன் வரவில்லை... தொழிலாளர்களை வழி நடத்தும் தொழிற்சங்கங்களின் தலையீடு இல்லாத எந்த போராட்டமும் வெற்றியடைய முடியாது! ஆகவே.. ஆகவே இந்தப் போராட்டத்தை... கை விடுவோம்..." என்று கண் கலங்கினான். தோட்டத்தலைவர்கள் தலை குனிந்து நின்றார்கள். கூடி நின்ற மக்கள் மரணத்தின்மேல் நடாத்தப்படும் திட்டங்களைக்கண்டு அஞ்சினார்கள்.


போராட்டத்தை கைவிட சம்மதித்ததார்கள். கூட்டம் பேச்சுமூச்சு இல்லாமல் கலைந்தது.

* * *

ஆனந்தன் கொலை யுண்டு ஆறுமாதங்களாகிவிட்டன.

தோட்ட நிர்வாகம் எல்லா விபரங்களையும் கூறியது. அந்த முன்னூற்றைம்பது ஏக்கர் தோட்டத்திலிருக்கும் ஐந்நூறு





போனஅந்த 'உரிமை'யைத் தூக்கி மடியில் வைத்து அழமுன்னே நூற்றுக்கணக்கில் ஆயுதந்தாங்கிகள் வந்து குவிந்தார்கள். கூட்டத்தில் கூடி நின்ற இளவட்டங்களை துப்பாக்கி முனையில் அள்ளிப் போட்டுக்கொண்டு ஓடினார்கள்.

...அன்று காணி அளக்க முடியவில்லை. ஓர் உயிரை மாத்திரமே குடிக்க முடிந்தது...

* * *

மயானத்திலிருந்து வீட்டுக்கு வந்தவர்கள் ஆனந்தனின் பெற்றோரை ஆறுதல் படுத்திவிட்டு கோவிலில் கூடினார்கள்.

ஒரு படித்த இளைஞன் அந்த அவசரக்கூட்டத்துக்கு தலைமை தாங்கிப் பேசினான். "... இந்தமாதிரி திட்டமிடப்பட்ட குடியேற்றங்களை ஒரு தோட்டத்து மக்கள் மாத்திரம் தனித்தும் போராடி வெற்றி காணமுடியாது...! இது ஒரு தோட்டப்பிரச்சினை இல்லை... இது ஒரு சமுதாயப் பிரச்சினை... நமது இனமே சேர்ந்து போராட வேண்டிய பிரச்சினை... எங்களுக்கு ஒரு ஆனந்தனை மட்டுமே பலிகொடுக்க முடிந்தது. இனிமேல் எவரையும் நாங்கள் இழப்பதற்கு தயார் இல்லை!" என்று ஆவேசமாகப் பேசிய அந்த இளைஞன்

தொழிலாளர்களோடு, பென்சன்காரர்கள், பிள்ளைக்குட்டிகள் எல்லோருமாக ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இடம்பெயர வேண்டும். அவர்கள் போக வேண்டிய தோட்டங்களின் விபரங்களும் வந்துவிட்டன. அவர்களை ஏற்றிச் செல்வதற்கு வாகனங்களும் வந்து குவிந்தன.

பல ஆண்டுகள் குடும்பமாக கூடிவாழ்ந்த மக்கள் திடீரெனப் பிரிக்கப்படும் நிலை மனித வதையாக இருந்தது. அவர்கள் ஒவ்வொருவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதார்கள். இனி ஒரு காலத்தில் எங்கே.. எப்போது.. எப்படி சந்திக்கப்போகிறோம்... நல்லது கெட்டது நடந்தால் எப்படி கலந்து கொள்ளப்போகிறோம் என்றெல்லாம் நினைத்துப் புலம்பினார்கள். கூக்குரலிட்டுக்கொண்டு வந்துநின்ற வாகனங்களில் ஏறினார்கள். நாய்கள், பூனைகள், கோழிகள் ஆடுமாடுகள் எல்லாம் வண்டிகளில் ஏற்றப்பட்டன. அவைகளும் தோட்டப்

புறக்குடிகள்! அவைகளும் நாடுகடத்தப்பட்டன!

அம்மன் கோவில், காட்டு முனியாண்டி, சிண்டாக்கட்டி, வால் முனி, வனத்துச் சின்னப்பர் கோவில் என்று எல்லா தெய்வங்களையும் வணங்கி, கதறி அழுதுவிட்டு வாகனம் ஏறினார்கள்.

பென்சர் கிழவர் பெருமாள் சிண்டாக்கட்டி கோவில் ஆலமரத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு 'வரவே மாட்டேன்' என்று அடம்பிடித்தார். அவருக்கு எல்லோரும் ஆறுதல் கூறினார்கள். அவர் அந்த தோட்டத்துக்கு வந்த காலத்தில் அவரே கட்டிய கோயில் அவர் நட்டு வளர்த்த ஆலமரம் இன்று வளர்ந்து கிளை படர்ந்து விழுது இறங்கி.. அரை ஏக்கர் தேயிலை மலையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. "...பாவிக... இந்த மரத்தையும் வெட்டிப்புட்டு வூடு கட்டிக்குவானுங்களோ...? சிண்டாக்கட்டி! ஒன்னையும் புடுங்கி வீசி புடுவானுங்களே...? அவுனுங்கள சும்மா வுட்டுப் புடாதே!" என்று ஓலமிட்டார். அங்கே நாட்டியிருந்த வீரமிக்கப் போர்க்கருவிகளைப் போன்ற ஈட்டிகளில் தேசிக்காய்களை குத்தி வைத்தார். ஏன்தான்.. இந்தக் கோவிலில் இத்தனை ஈட்டிகள்? தீயவர்களை ஒழிக்கவே இந்த தெய்வங்கள் ஆயுதம் தரித்தார்களாம்... 'சிண்டாக்கட்டி! கேடு செய்பிறவனை கேட்டுக்கோ.' என்று தள்ளாடி தள்ளாடி நடந்த பெருமாள் கிழவர் தான் வளர்த்தெடுத்த தேயிலைச் செடிகளையும், ஓங்கி வளர்ந்த சவுக்கை மரங் களையும், செம்பக மரங்களையும் பார்த்து கைகூப்பி கும்பிட்டார். அவரை அணைத்தப்படி லொறியில் ஏற்றினார்கள்.

> 'ஒரு காலத்தில் இங்கே வந்து பார்த்தால் எவனோ ஒருவன் இவனது குழிமேட்டில் வீடு கட்டியிருப்பான்... வேலியடைத்து தோட்டம் உண்டாக்கியிருப்பான்.. அல்லது நெடுஞ்சாலை அமைந்திருக்கும்... நாங்கள் வாழ்ந்த தடங்கள்... காணாமற் போயிருக்கும்...'

இந்த மனிதர்கள்.. தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையில், தங்களோடு அறிமுகமாகியிருந்த கல்லும் புல்லும், மரமும் செடியும், கோவிலும் குகையும், காடும் மேடும், ஆறும் ஓடையும்.. எல்லாவற்றையுமே பிரிந்து செல்லும் உணர்வுகளை விவரிக்க முடிய வில்லை...

இளைஞர்கள் ஆனந்தனின் குழி மேட்டை கும்பிட்டு, சூடம் கொளுத்தி ஒவ்வொருவரும் பிடி மண் அள்ளி முடிந்து கொண்டு தாங்கள் போக வேண்டிய தோட்டத்து வாகனங்களில் ஏறினார்கள். போராட்டத்தில் கைதான இளைஞர்கள் யாவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் ஆனந்தனின் குழிமேட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

... 'ஒரு காலத்தில் இங்கே வந்து பார்த்தால் எவனோ ஒருவன் இவனது குழிமேட்டில் வீடு கட்டியிருப்பான்... வேலியடைத்து தோட்டம் உண் டாக்கியிருப்பான்.. அல்லது நெடுஞ்சாலை அமைந் திருக்கும்... நாங்கள் வாழ்ந்த தடங்கள்... காணாமற் போயிருக்கும்...'லொறிகள் ஒருநாளில் இரண்டு மூன்று தடவைகள் ஓடித் திரும்பின.

சில தோட்டங்களில் தொழிலாளர்களை வேலைக்கு ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள்.

அந்தத் தோட்டங்களில் ஏக்கருக்கு மேலதிகமான தொழிலாளர்கள் இருந்த படியால் இந்த நிலைமை ஏற்பட்டன. அந்தத் தோட்டங்களில் தொழிலாளர்கள் நிர்க்கதியாக விடப்பட்டார்கள். திக்கற்ற அவர்கள் குழந்தை குட்டிகளோடு கோவில்களில் அகதிகளைப் போல தஞ்சம் புகுந்தார்கள்.


கொந்தராத்து அடிப்படையில் தோட்டங்களை வாங்கிய கம்பெனிக்காரர்கள் புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி நஷ்டப்படவிரும்பவில்லை. அவர்களும் கையை விரிந்தார்கள். தொழிலாளர்கள் இருதலை கொள்ளி எறும்புகளானார்கள். சின்னஞ் சிறுசுகளோடு பட்டினியைத் தழுவப்பயந்த அவர்கள் தொழில் தேடி சிதறிப்போனார்கள்.

சில தனியார் தோட்ட முதலாளிகள் இவர்களைத் தேடினார்கள்...! நூறு ஏக்கர், ஐம்பது ஏக்கர் சொந் தக்காரர்கள் இவர்களை வேலைக்குச் சேர்த்தார்கள். ஏதோவொரு விதத்தில் சம்பளம்... இவர்களின் 'அபயம்' நிலை குலைந்துபோன அந்த மக்களுக்கு கடலில் மிதந்த துடுப்பாகியது...

எந்த பண்ணையார்களுக்கும் ஜெமீன்தார்களுக்கும் கூலி விவசாயிகளாக – பண்ணையடிமைகளாக ஊழியம் செய்ய முடியாமல் பயந்து ஓடிவந்தார்களோ... அதே பண்ணை அடிமைகளாக கூலித் தொழிலாளர் களாக மீண்டும் தள்ளப்பட்டு விட்டார்கள்...

காணிநிலம், வீடு என்று சொந்தமேயில்லாமல் தோட்டமென்னும் சிறைக்குள்ளே வியாபார ஸ்தாபனங் களுக்கும் நிலச்சொந்தக்காரர்களுக்கும் கூலிகளாகவே வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் அந்த மக்கள் சுதந்திர வாழ்வு பெறும் காலத்தைத் தேடிக்கொண்டே யிருக்கிறார்கள்.

இந்த தேசத்தின் உரிமையுள்ள அந்த மனிதர்களின் நூற்றி ஏழுபத்திரண்டு கால வரலாறு பொய்த்து விடுமோ...? ☐



# கென் லோச்

## அரசியல் சினிமா இயக்குனர்

யமுனா ராஜேந்திரன்

அரசியல் சினிமாவுக்கென்று சில தனித்தன்மைகள் உண்டு. ஒரு நாட்டின் அரசியல் வரலாற்றில் நிகழ்ந்த மிகமுக்கியமான மக்கள் எழுச்சி சார்ந்த நிகழ்வுகளை திரையில் மறுபடி நிகழ்த்திக் காட்டும் விமர்சன மீளாய்வுதான் அரசியல் சினிமா.

ரஷ்யப் புரட்சி சார்ந்து எழுந்த, செர்ஜி ஐஸன்ஸ்டீனின் படங்கள். வியட்நாம் யுத்தத்திற்கெதிராக ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்காவில் எழுந்த மக்களின் எதிர்ப் புணர்ச்சி பற்றிச் சொல்லும் படங்கள். சீனாவில் கலாச்சாரப் புரட்சியின் போது வெளியான படங்கள். இத்தாலியில் ஸ்பெயினில் பாசிஸப் கொடுங்கோன்மைக்கு எதிராக பேசிய படங்கள். ஆப்ரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, ஆசியாவில் காலனியாதிக்க எதிர்ப்பு தேசவிடுதலைப் போராட்ட அனுபவங்களை முன்வைத்த படங்கள். இந்தியாவில் அவசர நிலைக் காலகட்டம் பற்றி, நக்ஸலைட் பிரச்சினை பற்றி வெளிவந்த படங்கள்.சமகாலத்தில் அந்தந்த நாடுகள் ஆட்சிகள் பற்றி எழுகின்ற விமர்சன ரீதியான படங்கள் என்று இவைகளை நாம் சுட்டிக் காட்டலாம்.

பிரிட்டீஸ் வரலாற்றில் மார்கரட் தாட்சரின் கீழ் கொடூரமாக்கப்பட்ட சமூக அமைப்பின் தன்மை, நிறவெறி, தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி, சமூகப் பிரச்சினைகள் பற்றிப் பேசும் படங்கள் பிரிட்டிஸ் இயக்குனர் கென் லோச்சின் படங்கள்.

சில முக்கியமான அரசியல் சினிமா இயக்குநர்கள் பற்றி முதல் அறிமுகமாக சில விஷயங்களைச் சொல்வதுதான் எனது நோக்கம்.

லண்டன் வாழ்க்கையின் மிகமிக வேகமான அன்றாட வாழ்க்கையினூடே என்னால் இயன்றளவு அவ்வப்போது அம்மாதிரி எழும் எழுச்சிகளைச் சொல்வதே என்நோக்கம்.

மூன்றாம் உலக நாடுகளில் அமெரிக்காவின் தலையீடு பற்றி விமர்சன ரீதியாகப் படங்களைக் கொண்டு வந்த ஒலிவர் ஸ்போன்.

அமெரிக்க பிரிட்டிஸ் அமைப்பின் நிறவெறித் தன்மையை தனது படைப்புகளில் வெளியிட்ட அலன் பாக்கர்.

இத்தாலியில் பெர்னார்டோ பெர்ட்டுலூச்சி ரோஸலின்னி. பிரான்ஸில் கோபார்ட். இந்தியாவில் மிருணாள் சென். தமிழில் (என் அனுபவத்தில்) கோமல் சுவாமிநாதன் என்று சிலரை சொல்ல இயலும்.

கென் லோச் பிரிட்டிஸ் திரைப்பட இயக்குனர். உலகெங்கும் மிகப்பரவலாகப் பேசப்படுகிற அரசியல் இயக்குனர். இவர் காலத்தில் வாழ்கிறோம் என்பதற்காக பெருமிதப்படுகிறார் 'மிஸிஸிப்பி (B)பேர்னிங்' படத்தைக் கொடுத்த அலன் பாக்கர். பிரிட்டிஸ் அரசாங்கத்திற்கு பிரிட்டிஸ் அரசியல் கட்சிகளுக்கு இவர் ஒரு தலைவலி. இவருடைய அக்கறைகள் பல்வேறு சமூக பிரச்சினைகள் சார்ந்தவை.

இவர் படைப்புக்கள் இருவகையானவை. டொக்குமெண்டரி வகையிலான அரசியல் விமர்சனங்கள் ஒன்று. பிரிட்டிஸ் வாழ்க்கை முறை குறித்த கதைப்படங்கள் மற்றையது.

சுரங்கத் தொழிலாளர் பற்றிய Striking Miners, தொழிலாள வர்க்க வீட்டுச் சிறுவனின் வாழ்வைச் சொல்லும் Kes, பிரிட்டிஸ் அரசாங்கத்தின் அயர்லாந்து தொடர்பான கண்டதும் சுட்டுக்கொல் எனும் கொள்கையைக் கடுமையாக விமர்சிக்கும் Hidden Agenda போன்றவை இவருடைய முக்கியமான படைப்புகள்.

இவருடைய Hidden Agenda கேனஸ் திரைப்பட விழாவில் பரிசுபெற்றது. ஆனால் பிரிட்டனில் அயர்லாந்தில் திரையிடுவதற்கு தடைவிதிக்கப் பட்டது.

விசாரணைகள் ஏதும் அற்று, தெளிவு செய்து கொள்ளப்படாமல் 'கண்டதும் சுட்டுக்கொல்' (Shoot to Kill) எனும் பிரிட்டீஸ் அரசாங்கத்தின், அயர்லாந்து விடுதலைப் போராட்டம் தொடர்பான கொடூரமான கொள்கையை விமர்சிக்கும், அம்மணமாக்கிக் காட்டும் படம் Hidden Agenda.

பிரிட்டிஸ் அறிவாளிகளதும் மனசாட்சி

உள்ளவர்களின் நீண்ட போராட்டத்தின் பின் இப்படம் பிரிட்டனில் திரையிடப்பட்டது.

இம்மாதம் இவருடைய Raining Stones படம் பிரிட்டனில் திரையிடப்பட்டுள்ளது. தொழிலாளி வர்க்கத்தில் துயரத்தைச் சொல்லும் படம் இது.

இவரைப்பற்றிய விமர்சனங்கள் பல்வேறு வகையானவை. இவர் இஸ்ரேலை விமர்சிப்பதன் மூலம் யூதர்களுக்கு எதிராக நிற்கிறார் என்கிறார்கள். லேபர் கட்சியின் உறுப்பினரான இவர் அக்கட்சியைப் பற்றி வெளிப்படையாக விமர்சனங்களை முன்வைத்தவர். தொழிலாளி வர்க்கத்தைக் காட்டிக் கொடுக்கும், கைவிடும் கட்சி என்று அதை விமர்சிக்கிறார் கென் லோச்.

சுரங்கத் தொழிலாளர் பற்றிய இவரது விவரணப்படம் கலை அழகு குறைந்தது என்று விமர்சிக்கிறார் மெல்வின் பிராக். மெல்வின் பிராக் சிறந்த படைப்பாளி. விமர்சகர். கலைஞர்.

தொழிலாள வர்க்கப் பின்னணியின் நகரமான Warwickshireஐச் சேர்ந்த Nuneatonனில் 1936இல் பிறந்தார் கென் லோச். இவரின் தந்தை ஒரு இயந்திரக் கட்டமைப்பாளர்.

Cathy Come Home என்று பி பி சிக்காக இவர் தயாரித்தபடம் வீடற்ற பிரிட்டிஸ் குடிமக்களின் பிரச்சினையைச் சொல்லும்படம். பின்னாளில் பிரிட்டிஸ் தொலைக்காட்சி இவர் படங்களில் நகைச்சுவையுணர்வும் பாலுணர்வும் குறைந்து விட்டதாக இவரது படைப்புக் களைத் திரை யிடாது விட்டது. மக்களிடமிருந்து இவர் அன்னியமாகி விட்டார் என்று காரணம் சொன்னது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் சனல் 4 தொலைக் காட்சிக்காக இவர் தயாரித்த 'தலைமைத்துவம் பற்றிய பிரச்சினைகள்' (Questions of Leadership) இது வரையிலும் திரையிடப்படாமல் இருக்கிறது.

இப்பிரச்சினையின் மற்ற பக்கத்தைக் காண்பிக்கவில்லை என்பதற்காக இதைத் திரையிடவில்லை என்கிறார் சனல் 4 நிர்வாகி. 'மற்றப் பக்கம் தான் வரலாறு நெடுகலும் காண்பிக்கப்பட்டு விடுகிறதே, பிறகு எதற்கு இன்னொரு மற்ற பக்கம்' என்று கேட்கிறார் கென் லோச்.

இப்பொழுதும் இவரது படங்களின் விநியோகம் என்புது ஐரோப்பியச் சந்தைகளில் அமெரிக்காவில் பிரச்சினையாகத்தான் இருக்கிறது.

ஆயினும் தனிநபர்கள் முயற்சியால் இவர் படங்கள் பிரிட்டனில் திரையிடப்படுகிறது.

## இனி வரும் இதழ்களில்...

நவீன நாடக பிரக்ஞை உள்ள நெறியாளர் க.பாலேந்திராவுடன்
**நேர்முகம்**

இலங்கை சினிமா
அரசியலும் கலாச்சாரமும்
**புத்தக அறிமுகம்**

**[illegible]**
கட்டுரையின் இறுதிப் பகுதி

சமீபத்தில் வெளியான இவரது Raining Stones படம் பரவலாகப் பேசப்படுகிற திரைப்படம்.

கென் லோச் ஒரு திரைப்பட இயக்குனர் மட்டுமல்ல, அத்துடன் தனது பொறுப்பு நிறைவு பெற்று விடுவதாக அவர் கருதவில்லை.

மக்களின் மீதான, கருத்துச் சுதந்திரத்தின் மீதான அரசின் தாக்குதலுக்கு எதிராக அவர் தெருவில் வந்து போராடவும் செய்கிறார்.

சமீபத்தில் New Statesman and Society பத்திரிகையில் வந்த ஜோன் மேஜர் பற்றிய ஒரு கட்டுரைக்காக அப்பத்திரிகை மீது இலட்சக் கணக்கான பவுண்டுகள் நஷ்டஈடு கோரி வழக்குத் தொடுத்தார் ஜோன் மேஜர்.

அப்பத்திரிக்கையை காப்பதற்காக தனது Raining Stones படத்தின் பிரத்தியேகக் காட்சியை நடத்தி பணம் வசூலித்துக் கொடுத்தார் லோச்.

இந்நிகழ்வில் பி பி சியில் சினிமாக்களை அறிமுகப்படுத்தும் Brry Norman கலந்து கொண்டு இவர் படத்தை அறிமுகம் செய்தார்.

மனசாட்சியுள்ள கென் லோச் போன்ற கலைஞர் களால் தான் இந்த உலகில் இன்னும் மழை பொழிகிறதோ!

கென் லோச்சின் முழுப்படங்களைப் பற்றியும் விரிவான ஆய்வும் அறிமுகமும் தமிழில் செய்யப்பட வேண்டிய ஒன்று. □

# முறிந்த பனை

1

முன்னுரை

பேராசிரியர் ப்றையன் செனெவிரத்ன
மருத்துவ ஆலோசகர்
இராணி மேரி மருத்துவமனை,
அவுஸ்திரேலியா.

'முறிந்த பனை' என்னும் இந்நூல் வட இலங்கையில் என்ன நடந்தது தொடர்ந்து என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பன பற்றிய வேதனை மிக்க வெளிப்பாடாகும். இலங்கை அரசும் இந்திய 'அமைதி பாதுகாப்பாளர்களும்' என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், மேலும் அதிக தகவல்கள் சார்ந்த வகையில் பல்வேறு போராளிக் குழுக்களின் நாயகர்கள் (போராட்டக் குழுக்களைச் சாராத அரசியல் வாதிகளும்) உண்மையில் எத்தகையவர்கள் என்பதையும் இந்நூல் ஆவணப்படுத்தியிருக்கின்றது. அவர்கள் எத்தகையவர்களாகப் பாசாங்கு செய்கிறார்கள் என்பதையும் அவர்கள் உண்மையில் யார்? அவர்களது விருப்பு வெறுப்புகள், நம்பிக்கைகள், கற்பனைகள், அவர்களை எப்படிப்பட்டவர்களாக காட்டுகின்றன என்பதையும் மட்டுமன்றி அவர்கள் உண்மையில் எத்தகையவர்கள் என்பதை இந்நூல் வெளிக்கொணர்ந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் நலன் பாதிக்கப்படும் என்ற பயத்தினால் ஒரு தனிமனிதனோ ஒரு குழுவோ தவிர்க்கப்படவில்லை. எந்தவொரு தகவலும் இருட்டடிப்புச் செய்யப்பட வில்லை. இந்நூலின் ஒரு பங்களிப்பாளரான கலாநிதி ராஜனி திரணகம படுகொலை செய்யப்பட்டமைக்கு போராளிக் குழுக்களும் இந்திய இராணு வமும் இலங்கை இராணுவமும் உண்மையில் பதில் சொல்லியாகவேண்டும். அவரை யார் கொன்றதென்று நாம் அறியாமல் இருக்கலாம், ஆனால் அந்த அம்மணி ஏன் கொல்லப்பட்டார் என்பதை நிச்சயமாக நாம் அறிந்தாக வேண்டும். அந்த அம்மணி செய்த மனித உரிமைப் பணிகளுக்காகவும், 'முறிந்த பனை'க்குச் செய்த பங்களிப்புக்காகவும் அவர் படுகொலை செய்யப்பட்டார். யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுவரும் ஒரு தனிச் சர்வாதிகார ஆட்சியை அதன் அடையாளச் சின்னம் என்னவாக மாறினாலும் எதிர்க்கவோ, கேள்வி கேட்கவோ, அம்பலப்படுத்தவோ கூடாது என்பதை ஏனையோருக்கு உணர்த்துவதற்கான எச்சரிக்கையே இதுவாகும். ராஜனி திரணகமவைச் கொன்ற கொலையாளிகள் யாழ்ப்பாண மக்களுக்கு அரும்பணியாற்றிய யாழ்ப்பாணத்தின் ஒரு தலை சிறந்த புத்திரியை மாத்திரம் கொல்லவில்லை. அதற்கும் மேலாகப் பெருமளவு நாசத்தைச் செய்ய முயன்றுள்ளார்கள். இந்த ஒரு காரணத்துக்காக மட்டுமே, தமிழ் மக்களின் தலைவிதி பற்றி ஆழ்ந்த அக்கறை கொண்டிருப்பவர்களில் ஒருவன் என்ற வகையில், இந்நூல் வெளியிடப் படுவதையிட்டு நான் பரவசமடைகிறேன்.

ஒரு 'விடுதலைப் போராட்டம்' என்பது மக்கள் சம்பந்தப்பட்டது, மக்களை அடக்குமுறையிலிருந்து விடுவிப்பதுடன், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் மீறப்படுவதைக் குறைப்பதற்காகச் செயற்படுவது. அதேவேளை விடுதலையின் பெயரால் இந்த நோக்கங்கட்கு மாறானவை நிலை நிறுத்தப்படுமானால் என்ன நடந்து கொண்டிருக்கின்றதென மக்கள் கேள்வி கேட்க இயலுமாயிருக்க வேண்டும். 'முறிந்த பனை' நாம் எல்லோரும் அறிந்தவற்றைத்தான் ஆவணப்படுத்தியுள்ளது. ஆனால் எங்களுக்குத்தான் அதை சொல்ல திராணி இல்லை. அது என்னவெனில், பொது மக்கள் ஈனத்தனமான ஒரு அதிகாரப் போராட்டத்தில் மரிக்க வேண்டிய ஒரு வெறும் மக்கள் தொகுதியாக ஆகியுள்ளனர் என்பதாகும். நாடு முழுவதும் சட்டத்தின் ஆட்சியின் இடத்தை ஆயுதமேந்திய குண்டர்களின் ஆட்சி பிடித்துள்ளது. இலங்கை மனித நாகரிகத்துக்குத் திரும்ப வேண்டுமானால், நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருப்பவை அம்பலப்படுத்தப்பட வேண்டும். சர்வதேச ரீதியாக நற்பெயர் பெற்ற 'சர்வதேச மன்னிப்புச் சபை' போன்ற மனித உரிமைக்குழுக்கள் இந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளன. தகவல் தொடர்புச் சாதனங்கள் அரசாலும் ஆயுதக் குழுக்களாலும் வாய்ப்பூட்டுப் போடப்பட்டும், அச்சுறுத்தப்பட்டுமுள்ளன. அதனால், தனித்துவமிக்க

தைரியசாலிகள் நாட்டில் உண்மையில் என்ன நடந்துகொண்டிருக்கின்றதென்பதை வெளியிடும் பொறுப்பை ஏற்றுள்ளார்கள். நான் ஒரு சிங்களவன் என்ற முறையில், எனது ஒரே கவலை, நாட்டின் ஏனைய பகுதிகளில் என்ன நடக்கின்றதென்பது பற்றி இதைப்போன்றதொரு விவரணத்தை எழுத தெற்கிலுள்ள நாம் ஒரு குழுவாக முன்வர முடியாதுள்ளோம் என்பதுதான்.

இந்தப் பிரமிப்பூட்டும் நூலைப் படிப்பவர்கள் யாராயிருப்பினும் அவர்கள் மனதில் முதலாவதாக எழும் கேள்விகள் "இதிலுள்ளவற்றை எவ்வளவிற்கு நம்பலாம்?" இதிலுள்ள தகவல்கள் எவ்வளவிற்குத் திடமானவை?, ஆனால் இந்நூலை எழுதிய ஆசிரியர்களை அறியும் வாய்ப்பைப் பெற்ற எங்களைப் போன்றவர்களுக்கு இக்கேள்விக்கு விடையளிக்க இடர்ப்பாடு ஏதும் இல்லை. யாழ்ப்பாணப் பல்க லைக்கழக விரிவுரையாளர் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர்களான இந்நூலாசிரியர்கள் ஐயத்துக் கிடமற்ற நேர்மையும், சீரிய நாணயமும் மிக்கவர்கள். இவர்கள், தாம் காட்டிய தரவுகளை உறுதிப்படுத்த, நம்பமுடியாதளவு முயற்சி எடுத்துள்ளார்கள். தகவல்களைச் சேகரிக்க இவர்கள் கையாண்ட வழிமுறைகள், புனைவுகளிலிருந்து உண்மையைப் பிரித்தெடுக்க அவர்கள் கொண்ட உறுதிப்பாட்டுக்கும் மக்கள் நிலைமைகள் எவ்வாறு இருக்கக் கூடுமென்ற கற்பனையாகவன்றி உண்மையான நிலைமைகளை முன்வைப்பதற்கும் வலிமை சேர்க்கின்றன. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் குழு (UTHR-JAFFNA) உறுப்பினர்கள் ஒரு குழுவாகச் செயற்பட்டதுடன், சில வேளைகளில் தனித் தனியாகவும் சம்பவங்கள் நிகழ்ந்த இடங்களைச் சென்று பார்வையிட்டும், நேரில் கண்ட சாட்சிகளைப் பேட்டி கண்டும், உண்மையில் என்ன நடந்த தென்பதை உறுதிப்படுத்தியுள்ளார்கள். அவர்கள் தாம் கண்டவற்றை நேர்மையாகவும், பயமின்றியும், எந்தவொரு நெருக்கடிகாரர்கட்கும் சார்பில்லாத வகையிலும் முன்வைத்துள்ளார்கள். இந்நூல் ஆசிரியர்களின் நேர்மையும் நாணயமுங் காரணமாக 'முறிந்த பனை'யிற் கூறப்பட்டவற்றுக்கும் போராளிக் குழுக்களினதும் அரசினதும் (இலங்கை அரசாகவோ, இந்திய அரசாகவோ இருக்கலாம்) கூற்றுக்களுக்கும் முரண்பாடு இருக்குமானால் எதை நம்ப வேண்டுமென்பதில் என்னைப் பொறுத்தவரையில் இடர்ப்பாடு ஏதும் இருக்காது.

இலங்கையில் நிலவும் குழப்பநிலைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு, இலங்கையில் வாழத்திராணியற்ற இந்த முன்னுரையின் ஆசிரியராலோ, அவரைப்போன்ற ஆயிரக்கணக்கானவர்களாலோ காத்திரமான பங்களிப்பு எதையும் செய்யமுடியாது. எது வசதியானதோ அல்லது எதைச் சொல்வது சில அதிகார அமைப்புகளுக்கு உகந்ததோ என்றில்லாமல், அவர்கள் பணி எங்கு தேவையோ அங்கு வாழ் வதற்கும் எது சரியோ அதைக் கூறுவதற்குத் தைரியமும் உறுதிப்பாடும், தேசபக்தியும் உள்ள, இந்த 'முறிந்த பனை' என்ற நூலின் ஆசிரியர்களைப் போன்றவர்களால் மாத்திரமே அந்தப் பங்களிப்பைச் செய்ய முடியும். அது தான் நேர்மையானதும், உண்மையானதுமான தலைமைக் குரிய சிறப் பியல்பாகும். இலங்கையின் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல் இந்த 'முறிந்த பனை' ஆகும். 'விடுதலை' 'அமைதி காப்பு' 'தேசிய பாதுகாப்பு' என்பவற்றின் பெயரால் யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தது, என்ன நடந்து கொண்டிருக்கிறது



ராஜினி திராணகம

என்பதை அம்பலப்படுத்தியதற்காக இந்நூல் ஆசிரியர்கள் 'தமிழ் இனத்துரோகிகள்' எனத் தமிழ் வெறியர்களால் அழைக்கப்படுவார்கள் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. நிலைமை சுமூகமாகும் ஒரு காலத்தில் இத்தனித்துவமான நூலின் ஆசிரியர்கள் சத்தியமான தேசப்பற்று மிக்கவர்களென அங்கீகரிக்கப்படுவார்கள். அவர்களின் இப்பணி, இலங்கையில் அராஜகம் நிலை நிறுத்தப்படுவதைத் தடுக்கும் ஒரு தலைசிறந்த பங்களிப்பென ஏற்கப்படும்.

* * *

## ஆசிரியர்களின் முன்னுரை ஏப்ரல் 1988

இந்த இரு தொகுதிகளிலும் அடங்கியுள்ளவை பெரும்பாலும் 1987 நவம்பரையடுத்த மூன்று மாதங்களிலே எம்மால் எழுதப்பட்டவை. தமிழீழ விடுதலை புலிகளின் (L.T.T.E) ஆயுதங்களைக் களையும் நோக்கத்துடன் தொடுக்கப்பட்ட இந்திய இராணுவத்தின் தாக்குதலைத் தொடர்ந்த காலப் பகுதியை இது குறிக்கும். அண்மைக் காலங்களில் கண்டிராத சமாதானத்தை இரண்டு மாதங்களாக அனுபவித்த பெரும்பான்மையான தமிழருக்கு இத்தாக்குதலின் பயங்கர விளைவுகள் எதிர்பாராத அதிர்ச்சியாக இருந்தன. இலங்கை இராணுவத் திடமிருந்து அவர்கள் நல்லது எதையும் எதிர்பார்க்கவில்லை. இலங்கை இராணுவத்தை நகரவிடாமல் தடுத்து நிறுத்தி வைத்திருப்பதை பார்க்கிலும் சற்றுக் கூடுதலாகவே போராட்டக் குழுக்களிடமிருந்து எதிர்பார்த்தனர். ஆனால் இந்திய இராணுவத்திடமிருந்தோ அவர்கள் அதிகம் எதிர் பார்த்தனர். உச்சநிலையை நோக்கிச் சென்ற இந்திய இராணுவத்தின் நடவடிக்கையின் பாதிப்புக்களோடு, தமிழ் மக்கள், உளரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் தாம் ஒரு பாரிசவாத நிலையிலிருப்பதை உணர்ந்தனர். பல்வேறு சக்திகள் ஆடிய விளையாட்டிற் சாதாரண மக்கள் இப்பொழுது அனாதரவான கைப்பாவையாக அகப்பட்டுக் கொண்டனர். மக்கள் பயமுறுத்தப்பட்டும், கொள்ளை யடிக்கப்பட்டும், அடித்துத் துன்புறுத்தப்பட்டும், சில சந்தர்ப்பங்களில் கொல்லப்பட்டுமுள்ளனர். இவற்றைக் கண்டிக்கும் சமுதாய எதிர்ப்பு அறிகுறிகள் சிறிதளவே தென்பட்டன. இவை எல்லாவற்றினதும் மத்தியிலே பல்வேறு நபர்கள் அதிகமானவற்றை மூடிமறைத்ததுடன் பிரமை களைப் பரப்பினர். எல்லோரும் உண்மையை ஒடுக் கியதன் மூலம் தம் நலன்களைப் பேணிக் கொண்டனர்.

> எங்களுள் இரு ஆசிரியர்கள், ஒரு சமூகத் தின் நிலைமை, அச்சமூகத்தின் பொருளா தார அடிப்படைகளில் பிரதானமாக நிர்ணயிக் கப்படுகின்றதென்னும் மாக்ஸியக் கண் ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். ஒருவர் சமூகத்தின் சீர்குலைவுகள், தார்மீக சீரழிவு களினால் அல்லது கடவுளின் குரலுக்குக் கீழ்ப்படியாமையினால் ஏற்படுகின்றனவென்ற நோக்கைக் கொண்டுள்ளார். மற்றைய ஆசிரியர் வெறுமனே பொருளியல் நோக்கங்களை அடைவதில் மாத்திரம் மிகுந்த ஈடுபாடு கொள்வதனால் தீமைகள் எம்மைச் சூழ்ந்து கொள்கின்றன என்னும் முனைப்பிற் செயற்படுகிறார்.

சமுதாயம் புத்தெழுச்சி பெறவேண்டுமென நாம் கடுமையாக உணர்ந்துள்ளோம். அதைச் செய்வதற்கு எங்களைப்பற்றியும், எங்கள் மீட்பர்களாக கருதப்படுகிறவர்களைப் பற்றியுமான உண்மைகளை அவற்றின் நிருவாணத்தன்மையில் எதிர்கொள்ள வேண்டும். நாம் எழுதுவதைத் தொழிலாகக் கொண்டவர்களோ, வரலாற்றியலாளர்களோ அல்லர். ஆனால், ஆழமாக உணரப்பட்ட இன்றைய தேவையை நிறைவேற்றும் ஆர்வத்தினால் நாம் எழுதத் தொடங்கினோம். அப்பொழுது எமக்கு எமது எழுத்துக்களை எப்படி வெளியிடப் போகின்றோம் என்ற எண்ணமிருக்கவில்லை. இந்நூலில் உள்ள கட்டுரைகளை நோக்கின் நாங்களும் நம்மிடையே கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளோம் என்பதற்கு சான்றுண்டு. எங்களுள் இரு ஆசிரியர்கள், ஒரு சமூகத்தின் நிலைமை, அச்சமூகத்தின் பொருளாதர அடிப்படைகளில் பிரதானமாக நிர்ணயிக்கப்படுகின்றதென்னும் மாக்ஸியக் கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். ஒருவர் சமூகத்தின் சீர்குலைவுகள், தார்மீக சீரழிவுகளினால் அல்லது கடவுளின் குரலுக்குக் கீழ்ப்படியாமையினால் ஏற்படுகின்றனவென்ற நோக்கைக் கொண்டுள்ளார். மற்றைய ஆசிரியர் வெறுமனே பொருளியல் நோக்கங்களை அடைவதில் மாத்திரம் மிகுந்த ஈடுபாடு கொள்வதனால் தீமைகள் எம்மைச் சூழ்ந்து கொள்கின்றன என்னும் முனைப்பிற் செயற்பட்டுள்ளார். ஆனாலும் நாம் எல்லோரும் மாற்றத்தை ஏற்படுத்த உணர்வுபூர்வமான முயற்சி இருத்தல் வேண்டுமென்பதைப் பொதுவாக ஏற்றுள்ளோம். ஒவ்வொரு கட்டுரையும் அதை எழுதுபவரின் நம்பிக்கைகளை பிரதிபலிக்கும், அதேவேளை கட்டுரைகள் யாவும் மாதக்கணக்காக நடைபெற்ற ஆலோசனைகள் கலந்துரையாடல்களின் விளைவாக ஒரு கூட்டு இயல்பையும் கொண்டுள்ளன. மேலும், இந்நூலின் வெளியீடு அநேக பகுதிகளில் மகிழ்ச்சியின்மையை உண்டாக்கும் ஒரு செயலுமா கும். இது தற்காலிகமானதெனவும் எல்லாக் கட்சி களும் தனிநபர்களும் இந்நூலை வாசிப்பது மிக நன்மையாக இருக்குமெனவும் நாம் நம்புகிறோம்.

இக்காரணங்களால் தனித்தனிக்கட்டுரைகளின் ஆசிரியர்களைக் குறிப்பிடாமல், இந்த ஆக்கத்தை ஒரு கூட்டு முயற்சியாக முன்வைக்கிறோம். எமது நோக்கம், உண்மையைக் கூற முயல்வதோடு, தமது மக்களுக்கு உதவுவதற்குத் தாம் என்ன செய்ய வேண்டுமென்பது தொடர்பாகக் குழப்பத்திலிருக்கின்ற உள்நாட்டு வெளிநாட்டுத் தமிழர்களுக்கு அறைகூவல் விடுப்பதுமாகும்.

ஒரு சிரேஷ்ட எழுத்தாளரின் அறிவுரைக்கிணங்க இந்நூல் இரு பாகங்களாக பிரித்தமைய வேண்டுமென நாம் தீர்மானித்தோம். முதல் தொகுதி இந்நூலின் முதற்பாகம், (இன்றைய நிகழ்வுகளோடு தொடர்புடைய) தமிழர்களின் வரலாற்றுப் பின்னணியை மேலோட்டமாக எடுத்துக் கூறுகின்றது. குழம்பிய நிலையிலுள்ள இத்தீவுடன் ஈடுபாடு கொண்டிராதவர்களுக்குப் பின்னணித் தகவல்களை அளிப்பதும் இன்றைய நிலைமையைப் புரிந்து கொள்ள ஒரு அத்திவாரமாக அமைப்பதுமே இதன் பிரதான நோக்கமாகும். இவ்விடயம் பற்றி அதிகம் இதற்கு முன்னர் எழுதப்படவில்லை.

> "எல்லாக் கட்சிகளும் தனிநபர்களும் இந்நூலை வாசிப்பது மிக நன்மையாக இருக்குமெனவும் நாம் நம்புகிறோம்."
>
> "THE BROKEN PALMYRA"
>
> இந்நூலின் ஆசிரியர்கள்
> ராஜன் ஹூல்,
> தயா சோமசுந்தரம்,
> கே. ஸ்ரீதரன்,
> ராஜினி திராணகம.
>
> இப்புத்தகத்தின் தமிழாக்கத்தை "முறிந்த பனை" எனும் தலைப்பில் தொடராக வெளியிடுகிறோம்.

இந்நூலின் இரண்டாம் பாகம் யாழ்ப்பாணத்திலே இந்தியப் படையின் தாக்குதல்கள் பற்றிய அறிக்கைகளுடன் பகுப்பாய்வுக் கட்டுரைகளையும் கொண்டுள்ளது. இந்தியப் படையின் தாக்குதல்கள் பற்றிய அறிக்கைகள் விரிவானவையாக இருக்க வேண்டுமெனக் கருதப்படவில்லை. அவை, வெறுமனே, நிகழ்வுகளின் உரு வடிவமைப்பைச் சுட்டிக்காட்டப் பயன்படும். யாழ்ப்பாணத் தீபகற்பத்துக்கு வெளியே மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்பதுயரங்களை அவை காலத்திலே ஒத்த தன்மைகளைக் கொண்டிருந்தபோதும் நாம் அவற்றைத் தொடவில்லை. கிழக்கு மாகாணத்திலே நடைபெறுகின்ற நிகழ்வுகளுடன் இவற்றையும் சேர்த்துக் கால முறைப்படி ஒழுங்குபடுத்தல் ஒரு கடினமான பணி என்பதோடு அது எம்மிடமுள்ள வசதிகட்கு அப்பாற்பட்டதுமாகும்.

கிழக்கு மாகணத்திலே பொதுமக்கள் சொல்லொணாத துன்பதுயரங்களைக் குறிப்பாக, 1984–87 காலப்பகுதியில், நடந்த இலங்கை அரசின் அருவருப்பான போரின் போது அனுபவித்துள்ளார்கள். திருகோணமலை மாவட்டத்திலே இலங்கைப் படைகளினால் சகல தமிழ்க் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் செய்யப்பட்ட அழிவுகளை நம்புவதற்கு அவற்றை நேரிற் பார்த்தல் வேண்டும். தங்கள் அபிலாசைகளும், நலன்களும் வடக்கிலே கவனத்திற் கொள்ளப்படுவதில்லை எனக் கிழக்கு மாகாண மக்கள் மத்தியிலே பரவலாகக் காணப்படுகின்ற உணர்வுகளில் பெருமளவு உண்மையும் உண்டு. கிழக்கைப் பொறுத்த வரையில் நிறைவேற்றாமல் விடப்பட்டுள்ளதென நாம் உணர்கின்ற பெரும் இடைவெளியை நிரப்புகின்ற பணியை ஆற்றலும், வாய்ப்புகளும் உள்ள யாராவது பொறுப்பேற்பார்கள் என நாம் நம்புகிறோம். கிழக்கின் பிரச்சினைகளை நாம் கவனத்திற் கொண்டபோதும், எமது பற்றாக்குறைகளை மறைப்பதற்காக வெறுமனே எதையும் இட்டுக்கட்டி எங்களால் எழுதமுடியாது.

இறுதியாக இருவருக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். அவர்களுள் ஒருவர் எமது கையெழுத்துப் பிரதிகளை அன்போடு தட்டச்சுச் செய்து தந்தவர். மற்றவர் திருத்தங்களைக் கூறியதுடன், பெறுமதிமிக்க போதுமான தகவல்களையும் தந்துதவிய சிரேஷ்ட எழுத்தாளர். யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் குழுவினர் நிகழ்வுகள் என்ற அத்தியாயத்தின் ஒருபகுதியைப் பங்களிப்புச் செய்தார்கள். அவர்களையும் நாம் நினைவு கூருகிறோம். (தொடரும்....)

றெலிப்பாஸ்போட்
TELEPASSPORT

றெலிப்பாஸ்போட் மூலம் குறைந்த செலவில்
வெளிநாடுகளுக்கு கதைக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு

குமார்
**081 - 521 9667**



**KARATE**
Learn the world's finest art of
SHOTOKAN KARATE

**கராத்தே வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டுமா?**

ரஞ்சன்
081 - 520 7872

CHIFF INSTRUCTOR : S. GANESHALINGAM
081 - 569 9416




பொள்ளாச்சி நசன்
அ.கு.எண் : 642 006.
Web : http//:www.thamizham.net